உ
குருபாதம்
# ஞானசம்பந்தம்
தருமையாதீனத் திங்கள் இதழ்
லர் 24] குரோதிஆண்டு மார்கழித்திங்கள் 10—1—65 [இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
திருக்கடவூர், ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்



கார்த்திகைச் சோமவாரத்தில் நிகழ்ந்த சங்காபிஷேகத்திற்குப் பின்னர் பஞ்சமூர்த்திகளின் திருவீதியுலா.

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

காயம் கரணமுதல்
நான்கிற்குங் காரணந்தான்
ஆய இருள் மாயை
அதுஎன்றன் - தூயபொருட்
போதனே! செங்கமலப்
பொற்பாதனே! எனை நீ
ஏதென்று சொல்லாய் இனி (25)

ஆசிரியர் :-
வித்துவான்,
சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர் :-
வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 | 10-1-65 | இதழ் 2.

## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | வாழ்த்துவோம் வணங்குவோம் ... | 73 |
| 2 | பொங்கல் வாழ்த்து ... | 77 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ... | 78 |
| 4 | சிவாகமத் தெளிவு ... | 89 |
| 5 | சித்தாந்த வினாவிடை ... | 94 |
| 5 | புனித வேள்வி ... | 100 |
| 6 | தமிழ் கூறு நல்லுலகம் ... | 105 |
| 7 | இராமேஸ்வரத்தில் புயலின் விளைவு ... | 109 |
| 8 | பாவை மாநாடு ... | 112 |
| 9 | செய்திகள் ... | 123 |
| 10 | எதிர்காலம் ... | 130 |
| 11 | இருபத்துமூன்றாவது ஆண்டு மலர்ப் பொருளடக்கம் ... | 134 |
| 12 | கடிதம் ... | 99 |

உ

சிவமயம்

# சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

இவ்வாண்டு கார்த்திகைமாதம் முதல் "ஞான சம்பந்தம்" திங்களிதழிற்கு இருபத்துநான்காவது ஆண்டு தொடங்கி நடைபெறுகிறது. தங்களுடைய அன்பும் ஆதரவும் என்றென்றும் பெருகி நிற்கப் பெரிதும் விழைகின்றேன்.

சந்தாப் பாக்கியுள்ளவர்கள் பாக்கியை அனுப்புவதுடன் 1965-ம் வருடச் சந்தாவையும் சேர்த்து அனுப்பி "ஞானசம்பந்தம்" வளர்ச்சிக்கு மேன்மேலும் ஊக்கமளிக்க வேண்டுகின்றேன். சந்தாப் பாக்கியில்லாத நண்பர்கள் வழக்கம்போல் 1965-ம் வருடச் சந்தாவை முன் கூட்டியே அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

சந்தா நம்பர் குறிப்பிட்டு எழுதுவதும், முகவரி மாற்றம் உடனுக்குடன் தெரிவிப்பதும் காலதாமதத்தை அகற்றி அலுவலகத்தின் சேவையையும் துரிதப் படுத்தும். புதுச் சந்தாதாரர்கள் "புதிய சந்தா" என்ற விபரம் குறிப்பிட்டு எழுதுவது நலம்.

ஆண்டுக் கையொப்பம் :-

உள்நாடு ரூ. 2—25 ] [ வெளிநாடு ரூ. 3—00

செயலாளர்,,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

*தருமபுரம், மாயூரம் P. O.*

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 ] குரோதி - மார்கழி - 10—1—65 [ இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## வாழ்த்துவோம்! வணங்குவோம்!

''கூவின பூங்குயில் கூவின கோழி'' என்றபடி, விடியற் காலையில் பறவைகள் எழுந்து ஆரவாரிக்கின்றன! இருள் நீங்கி, ஒளி தோன்றுகிறது! எங்கும் ஒரே குதூகலம்! இது நாள்தோறும் நிகழும நிகழ்ச்சி. இதுபோல ஆண்டொன்றில் நிகழும் நிகழ்ச்சி தை மாதப் பிறப்பு.

வெறுமையாய்க் கிடக்கும் இல்லங்களும் களஞ்சியங் களும் - ஏன்? மக்கள் வயிறுகளுங்கூட நிரம்புவது

தை மாதத்திலேதான். அதனால், 'தை மாதப் பிறப்பு வருகின்றது' என்று தெரிந்தவுடன் எல்லாருடைய முகங்களும் மலர்கின்றன; உள்ளத்தில் ஓர் ஊக்கம் பிறக்கின்றது. தை பிறந்தால் வை(வைக்கோல்) பிறப்பது மட்டும் அன்று; எல்லாவற்றுக்கும் வழியும் பிறக்கிறது. வழி தெரியாதிருந்தவற்றிற்கெல்லாம் வழி தெரிவதால், தை மாதப் பிறப்பை ஒரு காலை நேரம் என்றே கூறலாம். அப்படித்தான் கூறிவந்தனர் நம் முன்னோர்.

'மக்களுக்கு ஓர் ஆண்டுக் காலம், தேவர்களுக்கு ஒரு நாள்' என்றும், அதில், 'ஆறுமாத காலம் பகல்; ஆறு மாத காலம் இரவு' என்றும் கூறுதல் நம் முன்னோர் மரபு. தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய உள்ள ஆறுமாத காலத்தில் பகலவன் வடக்குப் பக்கமாகத் தோன்றிச்சென்று மறைவதையும், ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய அவன் தெற்குப் பக்கமாகத் தோன்றிச் சென்று மறைவதையும் காண்கிறோம். இக் காரணத்தால், இந்த இருகூற்று ஆறு மாதங்களும் முறையே, 'உத்தராயணம், தக்ஷிணாயனம்' எனப்படுகின்றன. இவைகளில், 'உத்தராயணமே தேவர்களுக்குப் பகல்' என்றும், 'தக்ஷிணாயனம் தேவர்களுக்கு இரவு' என்றும் சொல்லப்படும். ஆகவே, தக்ஷிணாயனத்தில் சுவர்க்கலோகம் சாத்திக் கிடந்து, உத்தராயணத்தில் திறக்கப்படுகிறதாம். 'மார்கழித் திங்களில் நடந்த பாரதப் போரில் அருச்சுனன் அம்புகளால் இறுதிநிலையை எய்திய வீடுமர், தம் தந்தையிடம் தாம்பெற்ற வரத்தால், தக்ஷிணாயன முடிவுவரையில் உடம்பைவிட்டு நீங்காதிருந்து, உத்தராயணம் பிறந்தபின்பே நீங்கி வீரசுவர்க்கம் புகுந்தார்' என்ற பாரத வரலாறு, இக் கொள்கையை வலியுறுத்துகிறது.

நடராசப் பெருமானுக்கு ஓர் ஆண்டில் ஆறு முறையே அபிடேகம் செய்யப்பெறுகின்றது. அவையே அப்பெருமானுக்கு ஆறுகால பூசையாம். அவைகளில், மார்கழி மாதத்தில் நடைபெறும் அபிடேகம் விடியற்காலை நிகழும் முதல் அபிடேகமாகவும், மறுநாள் நடைபெறும் தரிசனம், முதல்

தரிசனமாகவும் சொல்லப்படும். இவை எல்லாம் எதனைக் காட்டுகின்றன? நம் மக்களுக்குத் தை மாதப் பிறப்பில் உள்ள விருப்பத்தையே காட்டுகின்றன. திருமணம் முதலிய மங்கல நிகழ்ச்சிகள் பலவும் உத்தராயணத்தில் நிகழ்வதே பெரும்பான்மை.

இன்ன பல காரணங்களால் தை மாதப் பிறப்பு, 'உத்தராயண புண்ணிய காலம்' என்றும், 'மகர சங்கராந்தி' என்றும் சொல்லிச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றது. "வெறும்பானை பொங்குமோ மேல்" என்ற ஔவையார் வாக்கின்படி வெறுமையாய் இருந்த பானைகள், பால் உலையால் நிரம்பிப் பொங்குகின்றன. 'பொங்கலோ பொங்கல்!' என்று பொங்கி எழும் ஓசை எங்கும் கேட்கிறது. புதுப் பானையில் புத்தரிசியிட்டுப் பொங்கிய பொங்கலை உத்தராயணத்தில் புதியவனுய்த் தோன்றும் கதிரவனுக்கு, புதிய கரும்பு, காய், கிழங்குகளுடன் படைக்கின்றனர். புதுக்கி அழகு செய்யப்பெற்ற இல்லங்களில் ஆடவரும் பெண்டிரும் புத்தாடை உடுத்து அழகுடன் விளங்குகின்றனர். நண்பர்கள் ஒருவரை ஒருவர் அகங்குளிர்ந்து வாழ்த்துகின்றனர். அனைவருமே, ஆண்டவன் அருளையும், ஆன்றோர் ஆசியையும் பெறுகின்றனர்.

இப்படிப்பட்ட பல சிறப்புக்களுடன் பிறக்கும் இத் தை மாதத்தில் இறைவனுக்கு எடுக்கப்படும் விழாவை நாம் மறத்தற்கில்லை. அதுதான், பூச விழா - தைப்பூச விழா.

" மைப்பூசு கண்ணார் மட நல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
நெய்ப்பூசு வெண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய் "

என்று அருளினார், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். பூச விழாவில் சிவபெருமானுக்கு நெய்ப்பூசு வெண்புழுக்கல் - வெண்பொங்கலை நேரிழையாராகிய பெண்கள் படைத்து வழிபடுவார்களாம். ஆம்! தைப் பிறப்பன்று பால் உலை

ஏற்றிப் பொங்கும் பொங்கல் நெய்யில் மூழ்கி இருப்பது போலவே, தைப் பூசத்திலும் சிவபெருமானுக்கு அமைத்துப் படைக்கும் வெண்பொங்கலும் நெய்யோடு கூடி நிறைந் திருக்கிறது. நெய்ப்பூசு வெண்பொங்கலுடன் கொண்டாடும் தைப்பூச விழாவில் காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங் களில் சிவபெருமான் போந்து தீர்த்தம் கொடுக்க, அனை வரும் புனல்மூழ்கிக் களிப்பர்.

" ஈசன் எம்பெருமான் இடை மருதினில்
பூசம் நாம்புகுதும் புனலாடவே "

என்கின்றார் அப்பர்.

பாற்பொங்கல், நெய்ப்பொங்கல்களுக்கு ஏற்ப, இறை வனுக்கு இம்மாதத்தில் செய்யப்பெறும் மாத அபிடேகம் தேன் அபிடேகமாகும். இன்ன சிறப்புக்களெல்லாம் தைத் திங்கள் ஒன்றிற்கே உரிய சிறப்புக்களாகும்.

இத்தகைய சிறப்புடன் அடுத்துவரும் தைப் பிறப்பினை-பொங்கற் பெருநாளினை மகிழ்ந்து கொண்டாடுவோம். பானை யில் பால் பொங்குவதோடு, நாடெங்கும் பால்பொங்கச் செய்வோம். பசியும், பிணியும், பகையும் தொலைந்து, வசி யும், வளமும், அமைதியும் மிகுந்து நாடெங்கும் நலமுற்று வாழ - உலகெங்கும் ஒற்றுமையுற்று ஓங்க ஒருவனாகிய முழுமுதற் பொருளை உளம் உருகி வாழ்த்துவோம்! வணங்கு வோம்!

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.

The temple is clean and tidy. Instantanous devotion is inspired. A model worthy of emulation by all spiritual heads.

(Sd.) H. Siddaveerappa,
Ex. Home Minister,
Basavanagudi, Bangalore.

15—12—64.

உ

சிவமயம்

# பொங்கல் வாழ்த்து

சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி,
வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்.

---

மாநிலத்து மன்பதைகள்
மகிழ்ச்சி பொங்க
வான்மறையா கமநெறிகள்
வளர்ந்து பொங்கப்
பானிலத்துஞ் சொரிந்துயர்ந்த
பசுக்கள் பொங்கப்
பசுங்கொண்டல் பருவமழை
பொழிந்து பொங்க
நானிலத்தும் பயிர்செழித்து
நன்மை பொங்க
நாடெல்லாம் பகையொழிந்து
நயந்து பொங்கக்
கோனிலத்தா ராட்சிமுறை
குளிர்ந்து பொங்கக்
குரோதியினிற் றைப்பொங்கல்
பொங்க ! மன்னோ.

நலம் பெருகுக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## சங்கற்ப நிராகரணம்

### சித்தாந்த சைவாசாரியர் அநுக்கிரகம்

பதிபசு பாச முதிரறி வுகளுடன்
ஆரு முன்னர்க் கூருப் பின்னர்
இருபொருள் நீத்துமற் ரொருநால் வகையும்
ஈனமில் ஞாதுரு ஞான ஞேயமென்று
இசைய மூன்ருய்ப் பசுபதி என்றவற்று
இரண்டாய் இரண்டும் ஒன்றின்ஒன் ருகத்
திரண்டாம் பயன்எனும் திருவருள் தெளியின்
"சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்ரும்"
என்றிறை இயற்கை இயம்புதல் தகுமே.

— உமாபதி தேவ நாயனுர்.

நன்மையும் தீமையும் பகுத்துணர்தற்குரிய மக்கட் பிறப்பினை எடுத்தோர், அப்பிறப்பினுல் அடையும் பயன்கள், 'அறம், பொருள், இன்பம், வீடு' என நான்கு. எனினும், அவற்றுள். வீடு ஒன்றே முடிவான சிறந்த பயனுகும். அவ் வீடுபேற்றை விளக்குவனவே சமயங்கள்.

உலகில் உள்ள சமயங்கள் பலப்பல. "சமய கோடிகள்" என்ருர் தாயுமானவர். சமயங்களை, 'புறப்புறச் சமயம், புறச் சமயம், அகப்புறச் சமயம், அகச் சமயம்' என நான்காகப்

பகுத்து, ஒவ்வொன்றையும் ஆருக வைத்து விரித்து, அவை எல்லாவற்றிலும் மேம்பட்டு நிற்பது சித்தாந்த சைவம். சமயம். ஒன்ருய் இராதுபலவாகியது, கொள்கை வேறுபாடுகளாலேயாம். ஆகவே, ஒவ்வொரு சமயமும், பிறசமயங்களின் கொள்கைகளை மறுத்துத் தன் கொள்கையை நிலைநாட்டுதலைச் செய்தேநிற்கும், அவைகளே அவ்வச் சமய நூல்களாய் விளங்கும்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினுன்கில், சிவஞானசித்தியின் பரபக்கத்திலும், சங்கற்ப நிராகரணத்திலுமே பிறசமயங்கள் மறுக்கப்படுதலைக் காணலாம். பரபக்கத்தில் புறப்புறச் சமயங் களும் புறச்சமயங்களும், மதமும் மறுதலையுமாக வைத்து மறுக்கப்படுகின்றன. அவ்வாறு அதன்கண் மறுக்கப்பட்ட மதங்கள் உலகாயதம், பௌத்தம், சமணம், மீமாஞ்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், பாஞ்சராத்திரம் ஆகியவை. இவற்றுள் முதல் மூன்றும் புறப்புறச் சமயங்கள். மற்றவை புறச் சமயங்கள். பாசுபதம், மாவிரதம் முதலிய அகப்புறச் சமயங்கள் தத்துவக் கொள்கையைச் சிறப்பாக உடையனஅல்ல. ஆதலால், அவைகளுக்கு விரிவான மறுப்பு வேண்டுவதுஇல்லை. அகச்சமயங்கள் பெரும்பாலும் முத்தி நிலையைத்தான் மாறுபடக் கூறுகின்றன; அதனுல், அவைகள் பரபக்கத்தில் மறுக்கப்பட வில்லை. அவ் வகச்சமயங்களின் மாறுபாடான கூற்றுக்களை மறுத்தற்கு எழுந்ததே, சித்தாந்த சாத்திரத்தின் இறுதி நூலாகிய சங்கற்ப நிராகரணம்.

பாடாண வாத சைவம், பேத வாத சைவம், சிவசம வாத சைவம், சிவசங்கிராந்த வாத சைவம், ஈசுர அவிகார வாத சைவம், நிமித்தகாரண பரிணும வாத சைவம், அல்லது சிவாத்துவித சைவம் என்னும் ஆறுமே, அகச் சமயங்களாகும். இவற்றிற்குமேல், 'சுத்த சைவம்' என்பதும் ஒன்று உண்டு. இவைகள் இப் படிமுறையில்தான் அமைந்துள்ளன. இவை அனைத்தும் சைவ பேதமே என்ருலும், சித்தாந்த சைவத்தோடு மாறுபடுகின்றன. இவைகளைப் பற்றிய மறுப்புக்களைச் சங்கற்ப நிராகரணத்துள் மிக அழகான ஒரு முறையில் உமாபதி சிவாசாரியார் கூறியுள்ளார்.

'ஐக்கிய வாத சைவம்' என்பதும், அகச்சமயம் என்றே கொள்ளத் தக்கது; என்ருலும், அஃது 'ஆணவ மலம்' என்ற

ஓர் அடிப்படைப் பாசத்தை ஒப்புக்கொள்ளாததால், அஃது அகப்புறச் சமயத்தில் சேர்த்து எண்ணப்படுகின்றது.

ஏகான்ம வாதத்தில் நான்கு பிரிவு உண்டு. அவற்றுள், 'மாயா வாதம்' என்பதே முதன்மையானது; அது, பரபக்கத்துள் மறுக்கப்பட்டிருப்பினும், அதனை மிக நுட்பமாகவும், விரிவாகவும் சங்கற்ப நிராகரணத்தில் உமாபதி சிவாசாரியார் மறுத்துள்ளார். அதற்குக் காரணம் அம் மதம் இவ்வாசிரியர் காலத்தில் முன்னையினும் வலுப்பெற்றிருந்தமையே யாகும். இன்றும் அஃது ஒருவாறு இங்கும் அங்குமாகப் போற்றப்பட்டு வருவதைக் காணலாம்.

பிற சமயக் கொள்கைகள் இந் நூலில், சங்கற்பமும், நிராகரணமுமாக வைத்து மறுக்கப்படுகின்றன. 'சங்கற்பம்' என்பது, இங்கு, 'கொள்கை' என்ற பொருளில் வழங்கப் படுகின்றது. நிராகரணம் - மறுப்பு. இம் மறுப்புக்களை ஆசிரியர் அமைத்துள்ள முறை இது:

தில்லையில் கூத்தப்பெருமானுக்கு ஆனித் திருவிழாத் தொடங்கி நடைபெற்று வருகின்றது; ஆறும் திருவிழாவன்று தேர் மண்டபத்தில், சிவாகமங்களைக் கற்று, மெய்கண்ட நூல்களைக் கேட்டறியாத சைவாசாரியர் எட்டுப்பேர் இருந்தார்கள்; சிவாகமங்களை இகழ்ந்து ஒதுக்கும் மாயாவாதி ஒருவர் ஒருபக்கம் இருந்தார்; மெய்கண்ட சந்தானத்தில் வந்த சித்தாந்த சைவாசாரியர் ஒருவரும் தனியே இருந்தார். இந்நிலையில், வீடுபேறு அடைய விரும்பிய ஒருவர் அதற்கு உரிய வழி யாது என்று கேட்டார்; மாயா வாதி மாயவாதக் கொள்கைகளை விரிவாகச் சொல்லி, 'இதுவே வீடுபேற்றிற்கு உரிய மார்க்கம்' என்றார். அதைக் கேட்டிருந்த ஐக்கிய வாத சைவர் மாயாவாதியின் கொள்கைகளைத் தக்க நியாயங்களுடன் மறுத்து, தமது கொள்கைகளை வீடு பேற்றிற்கு உரிய வழியாகக் கூறினார். அக் கொள்கைகளைப் பாடாண வாத சைவர் மறுத்துத் தம் கொள்கையைக் கூறினார்; இவ்வாறே மேற்கூறிய முறையில் ஒருவர் கொள்கைகளை ஒருவர் மறுத்துத் தம் கொள்கைகளைக் கூறிவர, முடிவில் சித்தாந்த சைவாசாரியர் சுத்த சைவரை மறுத்தார். ஆயினும், அவர் தம் கொள்கையை விரித்துச் சொல்லவில்லை. அதனால், 'உமது கொள்கையை விளக்குக'

என்று சுத்த சைவர் கேட்க, 'எமது கொள்கையாகிய மெய்கண்ட சந்தானத்தின்கொள்கையை, 'சிவப்பிரகாசம்' என்னும் நூலில், நல்லாசிரியர் வாயிலாகக் கேட்டுணர்க' என்று அருளிச்செய்தார். இவ்வாறு அமைந்துள்ளது சங்கற்ப நிராகரண நூல்.

'கீழ்க் கீழ் உள்ள மதங்கள், மேல்மேல் உள்ள மதங்களால் மறுக்கப்படும்' என்பதும், எல்லாவற்றிற்கும் மேலாய் உள்ள சித்தாந்த சைவம் எந்த மதத்தாலும் மறுக்கப்படுதல் இல்லை' என்பதும் இந்நூலில் தெளிவாக்கப்பட்டுள்ளன. அவற்றோடு,

"ஏழஞ் சிருநூ றெடுத்த ஆயிரம்
வாழும்நற் சகனம் மருவா நிற்ப"

என்று, இந் நூல் செய்யப்பட்ட காலத்தையும் பாயிரத்தில் குறித்திருத்தல் ஒரு தனிச் சிறப்பாகும். அதனால், இது சாலிவாகன சகம் 1235-ல் (கி. பி. - 1313) செய்யப்பட்டது என்பது நன்கு தெளியப்படுகின்றது. இக் காலத்தில் கால ஆராய்ச்சி பெரிதாகக் கொள்ளப்படுகின்றது. அதனை உமாபதி சிவாசாரியார் முன்னமே செய்துள்ளார். இவர் இந் நூலில் கூறிய இக் குறிப்பைக் கொண்டே ஆராய்ச்சியாளர், சந்தானசாரியரது காலத்தை உறுதிப்படுத்துகின்றனர்.

இவ்வாறு பிறசமயங்களை மறுப்பது அச்சமயங்களின்மேல் உள்ள வெறுப்பினால் அன்று; உண்மையைத் தெரிவிக்கும் ஆராய்ச்சியினாலேயாம். சமயங்கள் யாவும் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டனவே என்பதையும், அவை வேறு வேறு வகையாய் இருத்தல், உண்மையை அவரவர் அறிவு நிலைக்கு ஏற்பச் சிறிது சிறிதாக உணர்த்துவதற்கேயாம் என்பதையும், இதனால், எல்லாச் சமயங்களும் உண்மைச் சமயமாகிய சித்தாந்த சைவத்தை அடைதற்குப் படிநிலைகளாம் என்பதையும் ஆசிரியர் இந் நூற்பாயிரத்தில் விளக்கியுள்ளார்.

"பெருங்கடல் உதவும் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைத்த சுந்தரக் கடவுள்
பாலரை உணர்த்தும் மேலவர் போலக்
கேட்போர் அளவைக் கோட்படு பொருளால்
அருளிய கலைகள் அளவில வால்அவை
பலபல சமயப் பான்மைத் தன்றே"

இதில், 'சிறுவர்க்குக் கல்வி கற்பிக்கும் முறைபோலவே பல சமயங்கள் அமைந்துள்ளன' என்று கூறியிருத்தல் நோக்கத் தக்கதாகும்.

" புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழிஉழன்றும் புகலும்ஆச் சிரம
அறத்துறைக ளவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் ; இதில்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர் "

என்ற சிவஞானசித்தித் திருவிருத்தம், இதனை நன்றாக விளக்கியுள்ளது. அந்த அந்தச் சமய நூல்களைப் படிக்கும்பொழுது அவைகளில் சொல்லப்பட்டவையே உண்மை எனத் தோன்றும். பின்பு அவைகளுக்கு மேற்பட்ட நூல்களைக் காணும்பொழுது முன் கண்டவை பொருந்தாதனவாதல் விளங்கும். சைவ சித்தாந்த நூல்களை ஓதி உணரும் உண்மைகள் அவ்வாறு மாறிப் போதல் இன்றி, எக்காலத்தும் நிலைபெற்று நிற்கும்.

" தொன்னூற் பரசமயந் தோறும் அதுஅதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து - முன்னூல்
விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகம் சார்வித்து "

என்ற குமரகுருபரர் வாக்கு, ஊன்றி உணரத்தக்கது.

இவ்வகையில், பலபடிகளுக்குமேல் உள்ள மாயாவாதம் முதலிய மதங்களை மறுக்கின்ற இந் நூலை, வாதம், செற்பம், விதண்டை முதலிய நுட்பமான தருக்கமுறைகள் எல்லாம் அமைய ஆசிரியர் அருளிச்செய்துள்ளார். ஆதலின், அம்முறைகளில் பழக்கம் உடையவர்கட்கே இந்நூலின் பொருள் இனிது விளங்குவதாகும். இந்நிலையில்,

1. மாயாவாதி கூறுவது:

'பிரமம் ஒன்றே சத்து - உள்ளது; மற்றவை எல்லாம் அசத்து - இல்லாதது. ஆதலின், எல்லாம் பரப்பிரமத்தின்

சொரூபமே என்பது வேதத்தின் துணிபு. ஆதலால், பல் வேறு வகையாகக் காணப்படுகின்ற உலகங்களும், உயிர்களும், அவற்றின் இன்பத்துன்பங்களும் எல்லாம் கனவுத்தோற்றம் போலப் பொய்யே. இப் பொய்த்தோற்றம், மாயையால் உண்டாவது. ஆகையால், கண்ணாடியில் உள்ள நிழலை ஒருவன் கழியால் தாக்கினால், கண்ணாடி உடையுமேயன்றி, நிழலுக்கு ஒன்றும் இல்லை. அதுபோல, இவை எல்லாம் பரப் பிரமத்தைத் தாக்குவது இல்லை. இதை உணராதிருப்பதே பெத்தம். 'எதனாலும் தாக்குண்ணாத அறிவாகிய பரப்பிரமமே நான்' என்று உணர்ந்து, தானே தானாய்விடுவதே முத்தி.' இதை,

## 2. ஐக்கியவாத சைவர் மறுப்பது :

'பெத்தம் கனவு போன்றது என்றும், முத்தி அதனினின்றும் விழிப்பது போன்றது என்றும் கூறினால், விழித்திருந்தவன் தானே, அறிவு மயங்கிக் கனவு காண்கின்றான்? பின்பு விழிக்கின்றான்? அதுபோலப் பரப்பிரமந்தானே மாயையில் அகப்பட்டுப் பந்த முற்றது? பின்பு அதுதானே பந்தத்திலிருந்து முத்திபெற வேண்டும்? பிரமத்தைத் தவிர வேறு எந்தப்பொருளுந்தான் இல்லையே? அறிவே வடிவாகிய பிரமம், இவ்வாறு அறியாமைக்கு உள்ளாயிற்று என்பது பொருந்துமா? பிரமமே அறியாமைக்கு உள்ளாகிவிட்டால், அதற்கு அறிவைத் தருபவர்யார்?' இவ்வாறு மறுத்து,

## அவர் தமது கோள்கையைக் கூறுவது :

இறைவன் ஒருவன். ஆனால், உயிர்கள் எண்ணற்றன. மாயையும் கன்மமும் எனப் பாசங்கள் இரண்டு. மாயையிலிருந்து கன்மத்துக் கிடாக இறைவன் உடம்பு முதலியவைகளைப் படைத்து உயிர்களுக்குக் கொடுப்பன். அவைகள், சூரியனை மேகம் மறைப்பதுபோல, ஆன்மாக்களின் அறிவை மறைத்து நிற்கும்; இதுவே பெத்தம்.

உயிர்கள், இறைவன் கொடுக்கும் உடம்புகளால் வினைப் பயனை நுகர்ந்துவருங்காலத்தில், இருவினையொப்பு வருமாயின், இறைவனது அருட்சத்தி பதிய, இறைவன் குருவாகி வந்து ஞானத்தை அருளுவன். ஞானத்தைப் பெற்ற உயிர், அதனால் மாயை கன்மங்களாகிய தடைகளின் நீங்கி, நீரும் நீரும்சேர்ந்து

ஒன்றுவது போல, அறிவாகிய தானும், அறிவாகிய இறைவனோடு சேர்ந்து ஒன்றாகிவிடும்;' இதை.

**3. பாடாண வாத சைவர் மறுப்பது :**

'சுத்தமாய் இருந்த உயிரை, மாயையும் கன்மமும் எவ்வாறு வந்து சூழ்ந்தன? அவற்றுள் எது முன்னே வந்து பற்றியது? ஏதோ ஒன்று - அல்லது இரண்டுமே தம் இயற்கையில் வந்து உயிரைப் பற்றின என்று கூறினால், முத்தியடைந்த பின்னும் அவை அவ்வாறு ஏன் வந்து பற்றுதல் கூடாது?

இனி உடம்பும் உட்கருவிகளும் உயிரின் அறிவை விளக்கு கின்றனவா? மறைக்கின்றனவா? விழிப்பில் விளங்குகின்ற அறிவு, உறக்கத்தில் விளங்காமைக்குக் காரணம், கருவிகள் இல்லாமை யன்றோ? ஆகையால், கருவிகள் ஆன்மாவின் அறிவை விளக்குவனவே யன்றி, மறைப்பன அல்ல. நீரும் நீரும் ஒருபொருளே; இரு பொருளன்று. அதுபோல இறைவனும் உயிரும் ஒருபொருளேயாயின், உயிரைப் பாசம் எவ்வாறு மறைக்கும்? ஆதலால், முத்தியில் உயிர் நீரோடு நீர் சேர்ந்தாற் போல இறைவனோடு சேர்ந்து ஒன்றாய்விடும் என்பது பொருந்து மாறில்லை.' இவ்வாறு மறுத்து,

**அவர் தமது கொள்கையைக் கூறுவது :**

'மாயை, கன்மங்களின் வேறாய், 'மூலமலம்' என்ற ஆணவமலம் அனாதியே உயிரைப் பற்றியுள்ளது. அதுவே உயிரின் அறிவை மறைப்பது. இதுவே, கன்மத்தைச் செய்யவும், அனுபவிக்கவும் செய்கிறது. இது பரிபாகம் அடைந்து நீங்கினால், உயிர் கல்லுப்போல் செயலின்றி இருக்கும். உறக்கம் இன்பமாவதுபோல, இதுவே முத்தியின்பமாம்.' இதை,

**4. பேதவாத சைவர் மறுப்பது :**

'கல்லுப்போல் கிடப்பது முத்தி எனில், ஆணவத்தில் உயிர் அவ்வாறுதானே கிடந்தது? அதுவே ஏன், முத்தியாக வில்லை? ஆகையால், அது பொருந்தாது'. இவ்வாறு மறுத்து,

**அவர் தமது கொள்கையைக் கூறுவது :**

'இரச குளிகையால் செம்பு களிம்பு நீங்கிப் பொன்னின் தன்மையை அடைவதுபோல, இறைவன் அருளால் உயிர் ஆணவம் நீங்கிச் சிவமாம் தன்மையைப் பெறுவதே முத்தி'. இதை,

5. சிவசமவாத சைவர் மறுப்பது :

'முப்பொருளும் நித்தியம் ஆகையால், களிம்பு அழிவது போல, ஆணவமலம் அழியாது; ஒரு பொருள் மற்றொரு பொருளாகாமையால், உயிர் சிவமாவது இல்லை'. இவ்வாறு மறுத்து,

அவர் தமது கோள்கையைக் கூறுவது :

'பதி ஞானம், பசு ஞானம், பாச ஞானம்' என்ற மூன்றும் எப்பொழுதுமே உண்டு; பக்குவம் இல்லாதபொழுது பசு ஞானம் பாச ஞானத்தைப்பற்றி நிற்கும். பக்குவம் வந்தபொழுது பதி ஞானம், பசு ஞானத்தை ஈர்க்கும். அப்பொழுது வேட்டுவனால் எடுக்கப்பட்ட புழு வேட்டுவன் ஆவதுபோல, உயிர் சிவனோடு சமமாய் நின்று, சிவன் செய்யும் செயல்களை எல்லாம் செய்யவல்லதாம்; இவ்வாறு சிவசமமாதலே முத்தி' இதை,

6. சிவ சங்கிராந்த வாத சைவர் மறுப்பது :

'உமது கூற்றினாலேயே பசுவிற்குப் பதிஞானம் எப்பொழுதும் இன்றியமையாதது என்பது பெறப்படுவதால், முத்திக் காலத்திலும் உயிர், சிவனைப்போலவே எல்லாம் செய்ய வல்லதாகாது. இரும்பு ஒன்றைச் சுடுமாயின் அது, தீயின்செயலன்றி நெருப்பின் செயல் அன்று. அதுபோல, உயிர் ஐந்தொழில்களுள் ஒன்றைச் செய்யுமாயின், அது சிவன் செயலேயாம்.' இவ்வாறு மறுத்து,

அவர் தமது கோள்கையைக் கூறுவது :

'தூய்மையான கண்ணாடியில் ஒளி நன்கு பிரதிபலித்தல் போல, ஆணவமலம் நீங்கிய உயிரில் சிவம் நன்கு பிரகாசிக்கும். அந்தப் பிரகாசத்தால் உயிரினது அறிவும், கரணங்களும் பதியறிவாயும், சிவகரணங்களாயும் நிற்கும். அப்பொழுது எல்லாவற்றாலும் சிவத்தை அறிந்து நிற்பதே முத்தியாம்' இதை,

7. ஈசுர அவிகாரவாத சைவர் மறுப்பது :

'கருவி கரணங்கள் மாயையின் காரியங்களாதலின், அவை எஞ்ஞான்றும் சிவத்தை யறியமாட்டா. ஆகையால், பசுகரணம் சிவகரணமாகப் பெற்றபின், உயிர் அவைகளால் சிவனை அறிந்து அனுபவிப்பது முத்தி என்றல் பொருந்தாது'. இவ்வாறு மறுத்து

அவர் தமது கோள்கையைக் கூறுவது :

'பக்குவம் வந்த காலத்தில் உயிர், இறைவனது திருவருள் விளக்கமாகிய ஞானத்தைப் பெற்று, வெயிலில் வருந்துவோன் நிழலைத் தேடி அடைவதுபோல, இறைவன் திருவடியைச்சென்று அடைந்து இன்பம் நுகரும்; இதுவே முத்தி' இதை,

8. நிமித்தகாரண பரிணாமவாத சைவர் மறுப்பது :

'மரநிழல்போல இறைவன் வாளா இருக்க, உயிர் தானே சென்று அவனை அடைவதற்கு, உயிர் சுதந்திர அறிவு உடைய தன்று. அறிவிக்கவே அறிவது, இவ்வாறு மறுத்து.

அவர் தமது கோள்கையைக் கூறுவது :

சிவமும், உயிரும், உலகமும் வேறுவேறு பொருள்களாய் இல்லாமல், பொன்னும், பணியும் போலவே இருக்கும். அதனால், அவை ஒருவகையில் வேற்றுமையும், ஒருவகையில் ஒற்றுமையும் உடையன. வேற்றுமை உணர்ச்சி பெத்தம். ஒற்றுமை உணர்ச்சி பெறுவதே முத்தி' இதை,

9. சுத்த சைவர் மறுப்பது :

'உனது கூற்று, மாயாவாதி கூற்றைவிடப் பெரிய முரண் பாடுடையதாகும்; மாயாவாதி சிவாகம முறையில் பேசுவதில்லை; நீ சிவாகம முறையில் பேசுகின்றாய்; இவ்வளவுதான் வேறு பாடு'. இவ்வாறு மறுத்து,

அவர் தமது கோள்கையைக் கூறுவது :

'முத்தியில் உயிர் தனித்த ஒரு முதலாய் இல்லாமல், சிவத் தோடு கலந்து ஒருமுதலாகிவிடும். இதை,

10. சைவாசாரியர் மறுப்பது :

'பதி, பசு, பாசம்' என்ற மூன்று முதல்களில் முத்தி நிலையில், 'பதி' என்ற ஒரு முதலே உண்டு என்றால் மற்றவை எங்கே எப்படி அழிந்தன? உமது கூற்றும் அபேதவாதிகள் கூற்றேயாயிற்று'

**அவரது அநுக்கிரகம்:**

'பதி, பதிஞானம், பசு, பசுஞானம், பாசம், பாச ஞானம்' என்று உள்ள ஆறுபொருள்களில், பசு, பாசஞானத்தைக் கொண்டு எல்லாவற்றையும் அறிவது பெத்தநிலே. பின்பு பசு. பாசத்தையும் பாச ஞானத்தையும் விட்டு, பதிஞானத்தைப் பெற்று நிற்கும். இந்நிலேயில் நான்கு பொருள்களே தோன்றும், பின்பு பசுஞானம் பதிஞானத்தில் அடங்க, 'ஞாதிரு, ஞானம்' ஞேயம் (காண்பான் - ஆன்மா ; காட்சி - அனுபவம் ; காட்சிப் பொருள் - சிவம்.)' என மூன்ருய் நின்று, பின்பு ஞானமும் மறைய, 'பதியும், பசுவும்' என்று இரண்டாகி, முடிவில் அத்துவிதக் கலப்பால் பசு, பதியேயாய் நிற்கும். இதுவே,

"சென்றுசென்று அணுவாய்த்
தேய்ந்துதேய்ந்து ஒன்ரும்"

என்று திருவாசகத்தில் அருளிச்செய்யப்பட்ட உண்மை முத்தியாம்.' இவ்வநுக்கிரகப் பகுதியே முதலில் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு சித்தாந்த சைவாசாரியர் அநுக்கிரகிக்க, 'இதை இன்னும் நன்கு விளக்க வேண்டும்' என்று வேண்டிய சுத்த சைவருக்கு, 'இவற்றின் விளக்கங்கள், சிவப்பிரகாசநூலில் விரிவாக உள்ளன; அவற்றை நல்லாசிரியர்பால் உணர்க' என்று அருளிச்செய்தார். இவ்வாறு முடிகின்றது. சங்கற்ப நிராகரண நூல்.

"ஒன்றிரண் டாகி ஒன்றின் ஒருமையாம் ; இருமை யாகி
ஒன்றின்ஒன் றழியும் ; ஒன்ரு தென்னின்ஒன் ருகா ; தீயின்
ஒன்றிரும் புறழின் இன்ரும்; உயிரின் ஐந்தொழிலும் வேண்டும்
ஒன்றிநின் றுணரும் உண்மைக் குவமைஆ ணவத்தோ
டொன்றே"

என்று சித்தாந்த முத்தி, சிவப்பிரகாசத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இந்நூலுக்குப் பின்பும், 'ஆன்மா முத்தியில், தனது ஆனந்தத்தையே அனுபவிக்கும்' என்னும் 'ஆன்மானந்த வாதம்' என்ற ஒருவாதம் எழுந்தது. அதனே மறுத்து உண்மைச் சித்தாந்த முத்தியை, எங்கள் ஆதிகுருமூர்த்திகளாகிய குருஞான சம்பந்தர் தங்கள் முத்திநிச்சய நூலில் அருளிச்செய்தார்கள்.

அதற்கு நம் ஆதீன முனிவராகிய வெள்ளியம்பலவாணர் என்பவர் பேருரையாகிய பாடியம் வகுத்துள்ளார்.

முத்தி நிச்சயத்தில் எங்கள் பரமாசாரிய மூர்த்திகள்,

" சந்தான நற்குரவர் தக்கோர் பிறர்சமயம்
நந்தாது தோற்றுவித்த நற்குரவர் - முந்தவே
எந்தமுத்தி சித்தாந்தம் என்றூர்கள் சைவத்தில்
அந்தமுத்தி நிச்சயிப்பேம் யாம் "

என்று தொடங்குகிறூர்கள். இதன் உரை :-

தொன்றுதொட்டு வரும் சந்தான நற்குரவரும், தகுதி வாய்ந்த சைவசித்தாந்த ஞானவானகள் பிறரும், சமயங்கெடாது வளர்க்கும் தெய்வத்தன்மையுடைய சமய குரவரும் முன்னுளிலே தானே சிவாகமத்திற் கூறும் சித்தாந்த முத்தியென, யாதொரு சிவானந்தானுபவமாவதையே கூறினூர்கள். அந்தச் சிவானந்தானுபவமாம் சைவசித்தாந்த முத்தியையே யாம் நிச்சயிப்பேம்.

" உள்ள மலம்நீங்கி ஓங்கு சிவானந்த
வெள்ளம் திளைத்ததுவாய் மேவுதலே - கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற்
சித்தாந்த முத்தியெனத் தேறு "

என்று முடிவில் இவ்வாறு சித்தாந்த முத்தியைத் தெளிவித்துள்ளார்கள். இதன் உரை :

ஆன்மாவானவன் தனது சத்தி நிரோதமான ஆணவமலம் முதலானவற்றை நீங்கி, ஒரு காலமும் குறைவுபடாத சிவானந்தமாகிய பெருங்கடலில் திளைத்து, அச்சிவனும், ஆன்மாவும் ஒன்றுமன்றி, இரண்டுமன்றி நின்ற அத்துவித நிலையைப் பெறுதலே, மதுவொழுகும் பூங்கோதை யணியும் விரிசடைக் கடவுளான பரமசிவன் கூறும் காமிகாதி ஆகமத்தில் சித்தாந்த முத்தி எனத் தெளிவாயாக.

இவற்ருல் எல்லாம் சித்தாந்தமுத்தியைத் தெளிய உணர்ந்து, அதனை அடையும் நெறியில் நிற்க வேண்டுவது மக்களாய்ப் பிறந்தோர் அனைவர்க்கும் இன்றியமையாக் கடமையாகும்.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்தில்
கேரள இராஜ்ஜிய கவர்னர், உயர்திரு கனம். வி. வி. கிரி அவர்கள்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானத்தைத் தரிசித்தல்.

தருமையாதீனக் கல்வி நிலையங்கள் சார்பில் அளித்த வரவேற்பில்
கேரளராஜ்ஜிய கவர்னர் மகிமைமிக்க வி. வி, கிரி அவர்கள்
குடும்பத்தினர்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் பொன்னுடை போர்த்து
ஆசியருளல்,

# சிவாகமத் தெளிவு

## ஆகம வரலாறு

“ஆரணம் ஆக மங்கள் அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளா னாகிற் கதிப்பவர் இல்லையாகும்
நாரணன் முதலாய் உள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாம்
சீரணி குருசந்தானச் செய்தியும் சென்றி டாவே”

—சிவஞானசித்தியார்.

என்றபடி பரமேஸ்வரன் திருமேனிகொண்டு வேதாகமங்களை அருளவில்லை என்றால், ஒருவரும் ஞானத்தையுணர்ந்து முத்தியை அடைதல் இயலாது. ஆகையால், உலக சிருஷ்டிக்குப் பிறகு சிவபெருமான், ஈசானாதி பஞ்ச முகங்களையுடைய சகள நிஷ்களத் திருமேனியையுடைய சதாசிவமூர்த்தியாய் எழுந்தருளியிருந்து, உயிர்களின் பொருட்டு, வேதம் சிவாகமம் என்னும் முதல்நூல்களை அருளினார்.

ज्ञानमेकं विभज्याऽशु दशाऽष्टादश संहिताः ।
सूत्रैरनन्तरं विप्र मया प्रोक्ताऽभिमुक्तये ॥

— சுப்ரபேதம்.

சிவபெருமான் வேதத்தைத் தத்புருஷம் முதலிய கீழ் நான்கு முகங்களால் அருளிச்செய்து, ஆகமங்களை, மேல்முகமாகிய ஈசானம் முதலிய ஐந்து முகங்களாலும் அருளினார். வேதத்தை முகத்துக்கு ஒன்றாக நான்கு முகங்களாலும் சொல்லி, ஆகமத்தை, கீழ்முகம் ஒவ்வொன்றுக்கும் ஐந்தும், மேல் முகத்தில் எட்டுமாகச் சொன்னார். ஆகையால், ஆகமங்கள் இருபத்தெட்டாம். அவை, காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷமம், ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம்புவம், அனலம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லலிதம், சித்தம், ஸந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என்பவையாகும்.

ஆகமம் இருபத்தெட்டில் காமிகம் முதல் சுப்ரபேதம் வரையில் உள்ள பத்தையும், ஒவ்வொருவருக்கு ஒன்ருகப் பத்துப்பேருக்குச் சிவபெருமான் சொன்ஞர். மற்ற பதினெட்டு ஆகமங்களை வேறு பதினெட்டுப்பேருக்குச் சொன்ஞர். பத்துப் பேர்கள் சிவர். பதினெட்டுப் பேர்கள் ருத்ரர்.

சிவர்கள் பத்துப்பேரும், மற்ருெரு பத்துப் பேர்களுக்குத் தாங்கள் கேட்ட பத்து ஆகமங்களைச் சொன்ஞர்கள். அந்தப் பத்துப்பேர்களும் மற்ருெரு பத்துப்பேர்களுக்குச் சொன்ஞர்கள். இந்த முப்பதுபேரும் சிவர்களேயாகையால், இவர்கள் கேட்ட பத்து ஆகமங்களுக்கு, 'சிவபேதம்' என்று பெயர்.

பதினெட்டு ருத்ரர்களும் மற்ருெரு பதினெட்டுப் பேருக்குத் தாங்கள் கேட்ட ஆகமங்களைச் சொன்ஞர்கள். இம் முப்பத்தாறு பேர்களும் ருத்ரர் ஆகையால், இவர்கள் கேட்ட ஆகமங்களுக்கு, 'ருத்ரபேதம்' என்று பெயர். ஆகவே, ஆகமங்களைக் கேட்டவர்கள் அறுபத்தாறுபேர் ஆகின்றனர். அவர்கள் பெயர்கள் :

## சிவ பேதங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | காமிகம் | பிரணவர்<br>த்ரிகலர்<br>ஹரர் | 6. | தீப்தம் | ஈசர்<br>த்ரிமூர்த்தி<br>உதானர் |
| 2. | யோகஜம் | சுதாக்கியர்<br>பஸ்மர்<br>விபு | 7. | சூக்ஷமம் | சூக்ஷமர்<br>வைச்ரவணர்<br>ப்ரபஞ்சனர் |
| 3. | சிந்தியம் | சுதீப்தர்<br>கோபதி<br>அம்பிகை | 8. | ஸஹஸ்ரம் | காலர்<br>பீமர்<br>தர்மர் |
| 4. | காரணம் | காரணர்<br>சர்வருத்ரர்<br>ப்ரஜாபதி | 9. | அம்சுமான் | அம்பு<br>உக்ரர்<br>ரவி |
| 5. | அஜிதம் | சுசிவர்<br>சிவர்<br>அச்சுதர் | 10. | சுப்ரபேதம் | தேசேசர்<br>விக்னேசர்<br>சசி |

## ருத்ர பேதங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | விஜயம் | அநாதிருத்ரர்<br>பரமேசர் | 20. | முகபிம்பம் | ப்ரசாந்தர்<br>ததீசி |
| 12. | நிச்வாஸம் | தசார்ணர்<br>பார்வதி | 21. | ப்ரோத்கீதம் | சூலி<br>கவசர் |
| 13. | ஸ்வாயம்புவம் | நிதனேசர்<br>பத்மபூ | 22. | லலிதம் | ஆலயேசர்<br>லலிதர் |
| 14. | அனலம் | வ்யோமர்<br>உதாசனர் | 23. | சித்தம் | விந்து<br>சண்டேசர் |
| 15. | வீரம் | தேசர்<br>பிரஜாபதி | 24. | ஸந்தானம் | சிவநிஷ்டர்<br>அசம்பாதர் |
| 16. | ரௌரவம் | பிரமேசர்<br>நந்திகேசர் | 25. | சர்வோக்தம் | சோமதேவர்<br>நிருசிங்கர் |
| 17. | மகுடம் | சிவர்<br>மகதேவர் | 26. | பாரமேச்வரம் | சீதேவி<br>உசனர் |
| 18. | விமலம் | சர்வாத்மர்<br>வீரபத்ரர் | 27. | கிரணம் | தேவவிபு<br>சம்வர்த்தர் |
| 19. | சந்திரஞானம் | அநந்தர்<br>பிரகஸ்பதி | 28. | வாதுளம் | சிவர்<br>மஹாகாளர் |

இருபத்தெட்டு ஆகமங்களும் ஐந்து முகங்களிலிருந்தும் தோன்றின என்பதையும், அவைகளைக் கேட்டவர்கள் அறுபத்தாறு பேர்கள் என்பதையும் திருமந்திரம் தெளிவாகக் கூறுகின்றது.

" அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சோ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே"

— திருமந்திரம்.

சிவபேதங்களை, 'சைவம்' என்றும், ருத்ரபேதங்களை, 'ரௌத்ரம்' என்றும் கூறுவதுண்டு. இந்த இருபத்தெட்டு ஆகமங்களும் சதாசிவ மூர்த்திக்கு, சரணம் முதலிய அங்கங்களாய் இருக்கின்றன என்று சுப்ரபேதம் கூறுகிறது.

एभिर्भेदोपभेदैश्च सादाख्ये मूर्त्ति मास्थितः ।
शैवभेदमिदं तन्त्रं दशाष्टादश संहिताः ॥
चिन्तामणिरिवाभाति एकया बहुधादिशेत् ।
यद्यप्येको भवेद्वक्ता श्रोतारो बहवो यथा ॥

— சுப்ரபேதம்.

शैवागमोपिद्विविधः श्रौताऽश्रौत विभेदतः ।
श्रुतिसारमयः श्रौतः स्वतंत्र इतरोमतः ॥
स्वतंत्रो दशधापूर्वं तथाऽष्टादशधा पुनः ।
कामिकाद्वि समाख्याभिः सिद्धस्सिद्धांत संज्ञितः ।
श्रुतिसार मयोन्यस्तु शतकोटि प्रविस्तरः ॥

— சங்கரஸம்ஹிதை.

சதாசிவமூர்த்தியால் தரப்பட்ட இந்த ஆகமங்கள் வேத சாரமான சிறப்புநூல். ஆகையால், இவை, 'ச்ரௌதம்' என்று சொல்லப்படுகின்றன. காபாலம், பாசுபதம் முதலிய பிற ஆகமங்கள் வேதத்திற்கு வேறுபட்டிருப்பதால் அவை. 'அச்ரௌதம்' எனப்படும்.

இருபத்தெட்டு ஆகமங்கள் மூலாகமங்கள். ஒவ்வொரு ஆகமத்திற்கும் சில உபாகமங்கள் உண்டு; அவை மொத்தம் இருநூற்றி ஏழு ஆகும். அவை, நாரசிங்கம் முதல் விச்வாத்மகம் ஈருகச்சொல்லப்படும். மூலாகமம், 'சுவதந்திரம்' என்றும், உபாகமங்கள், 'இதரம்' என்றும் சொல்லப்படும். மூலாகமம், உபாகமம் இவைகளில் உள்ள க்ரந்தங்கள் அளவில்லாமல் இருக்கின்றன. அதுபற்றி, ஆகமங்கள், 'எண்ணில் கோடி' என்றும் சொல்லப்படுகிறது.

"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே"

— திருமந்திரம்.

ஆகமங்களைக் கேட்டவர்களில் அம்பிகையும் ஒருத்தியாகச் சொல்லப்படுகின்றது. அதைச் சிறப்பாகச் சேக்கிழார் கூறி யிருப்பதை முன் சொன்னோம்.

ஆகமங்களைக் கேட்டவர்களில் அனந்த தேவர், நூற்றுப் பதினெட்டு ருத்ரர்களில் முதல்வராகிய ஸ்ரீகண்ட ருத்ரர்க்கு அவ்வாகமங்களைச் சொன்னார். ஸ்ரீகண்டருத்ரர் நந்தி தேவர்க்குச் சொன்னார். நந்தி தேவர் பல சிவகணத்தவர்க்கும், தேவர்கட்கும், முனிவர்கட்கும் சொன்னார். அவர்களால் சிவாகமங்கள் எங்கும் விஸ்தாரமாகப் பரவின.

நந்திதேவரிடம் கேட்டவர்களில் திருமூலர் ஒருவர். அவர் ஆகமப்பொருளைத் தமிழில், 'திருமந்திரம்' என்ற நூலாகச் செய்தார். நந்திதேவரிடம் ஆகமங்கேட்டவர்களில் சனற்குமார முனிவர் வழியில் மெய்கண்டார் ஞான பரம்பரை விளங்குகிறது. மற்றும் எத்தனையோ குருபரம்பரைகளால் சிவாகமங்கள் இவ்வுலகத்தில் விளங்கிவருகின்றன.

( தொடரும் )

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

We are very happy and fortunate to visit this famous temple. It is clean and tidy and inspire faith in Godhood. The visit is worthwhile.

(Sd.) Sri Shivarameshwara Swamiji,
13—12—64. Sutar Math, Mysore.

நாகைத் தமிழ்ச்சங்க
நல்லன்பர் சிலர் வந்தோம்
ஓகை மிகக் கொண்டோம்
உள்ளமெலாம் பூரித்தோம்
தோகை ஊர் தியினன்
தோன்றும் திருக்கோயில்
நாகையன்பர்க்கே
நல்லனவாய் நின்றதுவே.

நாகைத் தமிழ்ச்சங்க அன்பர்கள்.
13—12—64.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 24, இதழ் 1, பக்கம் 40 இன் தொடர்ச்சி )

## சம்பு பட்ச : அணு பட்ச விளக்கங்கள்

**மாணுக்கன்:** புண்ணிய விசேடத்தால் உலகத்தைத் தொழிற் படுத்தும் தலைமைப் பாட்டினை எய்தும் அணுக்களும் (உயிர் களும்) சம்பு பட்சம் போலவே நவ பேதங்களை அடையுமோ?

**ஆசிரியர்:** இது பற்றிப் பலர் பல வகையாகக் கூறுவர் அணுக்களாகிய உயிரினத்தவர் தம் புண்ணிய விசேடத்தால், 'அயன், மால்' என்னும் நிலைக்குமேல் செல்லுதல் இல்லை என்பர் சிலர். 'அயன், மால்' என்பவரோடு 'உருத்திரனுகவும், உயிரினத்தவர் ஆதல் உண்டு என்பர் மற்றும் சிலர். நவந்தரு பேதங்களிலும் உயிர்கள் நிற்றல் உண்டு என்பர் வேறு சிலர். இவற்றிற்கு இடையில், 'நவந்தரு பேதங்கள்' என்று சொல்லப் படுகின்ற அவை அனைத்தும் அணு பட்சமே யன்றி ஒன்றேனும் சம்பு பட்சம் அன்று என்பர் ஒருசாரார். அவருள், 'நவந்தரு பேதங்களுள் ஒன்றேனும் சம்பு பட்சம் அன்று' என்பார்க்கு, இறைவனது தடத்த நிலையும், அது பற்றிவரும் மூவகைத் திருமேனி முதலியனவும் உளவென்றல் கூடாதாய் முடியு மாகலின், அது பொருந்துமாறில்லை.

இனி, உயிர்கள் தம் தாழ்நிலையினின்றும் படிமுறையான் உயர்நிலை அடைந்து, முடிவில் சிவமேயாய் நிற்கும் என்பது சைவ சித்தாந்திகள் எல்லார்க்கும் உடன்பாடேயாகலின், எல்லா வற்றிற்கும் மேலான பரசிவமாயே நிற்றற்கு உரிய உயிர், அச் சிவத்தின் தடத்த நிலைகளாகிய நவந்தரு பேதங்களிலும் நிற்கும் என்பதனுல் வருவதொரு குற்றம் இன்று. ஆகவே, 'நவந்தரு பேதங்கள் சம்பு பட்சத்திலும் உண்டு; அணு பட்சத்திலும் உண்டு' என்பதே உண்மையாம். ஆயினும், 'அதிகாரம்'

அல்லது 'தலைமைப்பாடு' என்பது, அஃதாவது உலகத்தைத் தொழிற்படுத்தும் செயற்பாடு மகேசுரனுக்குமேல் இல்லாமையால், 'அணுபட்ச பேதங்கள் மகேசுரனுக்குமேல் இல்லை' என்று சொல்லப்படும்.

இனி, காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல், இறைவன் உயிர்களோடு யாண்டும் உடனாய் நின்று அறிவித்தும் அறிந்தும், செய்வித்தும் செய்தும் நின்றாலன்றி, உயிர்கள் ஒன்றனை அறிதலும் செய்தலும் இலவாமாகலானும், அவ்வாறு எல்லா உயிர்கட்கும் எவ்விடத்தும் உடனாய் நின்று உதவுதலே அவனது தடத்த நிலைகளாதலானும், மகேசுரனுக்குக் கீழ் சம்பு பட்சம் இல்லையென்றலும் கூடாததேயாம். ஆயினும், உலகத்தைத் தோற்றுவித்தலும், நிறுத்துதலும் ஆகிய இரு தொழில்கள் ஒடுக்குதல் தொழிலுள் அகப்பட்டு நிற்பனவாதல் பற்றி, அவற்றிற்குரிய அயன்மால்களது வடிவம் முதலியன அணுபக்கத்திற்கு உரியன எனவும், ஒடுக்கம் முதலிய தொழில்களுக்கு உரிய மகேசுரன் முதலியோரது வடிவம் முதலியன சம்பு பட்சத்திற்கு உரியன எனவும் பாகுபாடு செய்யப்பட்டமையின், 'மகேசுரனுக்குக் கீழ் சம்பு பட்சம் இல்லை' என்று கூறப்படும் என்க.

எனவே, மகேசுரனுக்குமேல் செல்லும் உயிர்கள் அந்நிலையில் உண்டாகும் இன்பங்களை நுகர்ந்து மகிழ்தலன்றி, உலகத்தைச் செயற்படுத்துதல் இல்லை என்பதும், மகேசுரனுக்குக் கீழ் வரும் சம்பு பட்சங்களது உண்மை தத்துவ உணர்வு உடையோர்க்கு அன்றி ஏனையோர்க்கு உணரவாரா என்பதுமே மேற்கூறியவாறு கூறப்படும் கூற்றிற்குப் பொருள் என்பது விளங்கும்.

இங்ஙனமாகவே, இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்துதலைத் தானே செய்தல், பிறர் வாயிலாகச் செய்வித்தல் என்னும் இரண்டனுள், தானே செய்தல் எவ்விடத்தும் உளது என்பதும், பிறர் வாயிலாகச் செய்வித்தல், அவன் அதனை விரும்பியவழி மகேசுரனுக்குக் கீழ் அனந்தர், உருத்திரர் முதலியவரிடத்தே நிகழ்வது என்பதும் பெறப்படும். இன்னும், 'செய்வித்தல்' என்பது, 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி' என்னும் மூன்று நிலைகளில், 'வைகரி, மத்திமை' என்னும் வாக்குக்களிலும், காலம், கலை முதலிய முப்பத்தொரு தத்துவங்களிலும் நிகழ்வது என்பதும், 'செய்தல்' என்பது அதீதம் முதலிய ஐந்து நிலைகள்,

சூக்குமை முதலிய நால்வகை வாக்குக்கள், சிவதத்துவம் முதலிய முப்பத்தாறு தத்துவங்கள் ஆகிய அனைத்திலும் நிகழ்வது என்பதும் நுண்ணுணர்வான் உணர்ந்து கொள்ளப்படுவன வாம். இவை எல்லாம் தத்துவங்களின் இயல்பு கூறுமிடத்து இனிது விளங்கும்.

மாணுக்கன்: அவ்வாறுயின் ஆகுக: இந்திரன் முதலிய தேவர்கள், 'அயன், அரி, அரன்' என்னும் காரணக் கடவுளர் கள், மற்றும் நூற்றுப் பதினெண்மர் முதலாகச் சொல்லப்படும் உருத்திரர்கள், நந்திதேவர் முதலிய சிவகணங்கள், இவர்கட்கு மேற் சொல்லப்படும் அனந்தர் முதலிய வித்தியேசுரர், மற்றும் விநாயகர், முருகர், வைரவர், வீரபத்திரர் முதலிய சிவகுமாரர் கள், இவர்கட்கு உள்ள தேவிமார்கள் ஆகிய இத்துணைப் பேர்களுக்குள்ளே அமைந்துள்ள வேறுபாடுகள் யாவை?

ஆசிரியர்: அவர்களுக்கெல்லாம் உரிய வடிவும் தொழிலு மாக வேதங்களிலும், ஆகமங்களிலும், புராணங்களிலும். இதிகாசங்களிலும் சொல்லப்பட்ட வேறுபாடுகளே அவர் களுக்குள் அமைந்த வேறுபாடுகளாம். அவை நிற்க, மாசுடை உலகில் நிற்பினும், எவ்வாற்ருனும் இறைவன் உலகிற் செல்லு தலும், அவனது உண்மைத் திருமேனியைக் காணுதலும் இல்லாத மக்கள்போலின்றிப் பொதுச் சிவபுண்ணியத்தால் ஒரோவழித் தூய உலகில் அரிதிற் சென்று இறைவனை உண்மைத் திருமேனி யில் அரிதிற்கண்டு மீள்வோர் தேவர் எனவும், அவருள்ளும் அவைகளைச் சிறிது எளிதிற் பெறுவோர் இந்திரன் முதலிய இறையவர் எனவும், இவ்விருவகைத் தேவர்போலின்றி, உண்மைச் சிவபுண்ணியத்தால் தூய உலகத்தைப் பெற்று, இறைவனை உண்மைத் திருமேனியில் எளிதிற்கண்டு வாழ்வோர் உருத்திரர் எனவும் உணர்ந்துகொள்க.

இன்னும், தேவரும், இந்திரன் முதலிய திசைக்காவலரும்' 'அயன். மால்' என்னும் காரணக் கடவுளரும் இறைவனை ஒரோ ஒருகால் காணப்பெற்ருராயினும். தம் உடம்பு, உலகு முதலியவற்றின் சார்பால் பல்காலும் அவனை மறந்து, தம் தொழிற்குத் தம்மையே முதல்வராகக் கருதி மயங்குதலும், அம் மயக்கங் காரணமாக அத்தொழில் நிகழ்ச்சியிடத்துச் சிலபோது மகிழ்ச்சியும், சிலபோது வாட்டமும் உற்றுத் தொடக்குறுதலும். தம் தம் பதவிகளின் உயர்வு தாழ்வுகளில் விருப்பு வெறுப்புக் களைப் பொருந்துதலும் உடையர். உருத்திரர் அவ்வாறின்றித் தம் உடம்பு, உலகு முதலியவற்றின் சார்பால், இறைவனை

யாண்டும் மறவாதும், தம் தம் தொழில் நிகழ்ச்சியில் பெரிதும் தொடக்குறுதும் நிற்பர்; எனினும், பற்றருமையின், பதவியது உயர்வு தாழ்வுகளில் விருப்பு வெறுப்புக்களை முற்றும் நீங்குவா ரல்லர். தேவரின் மேம்பட்ட இந்திரன் முதலிய இறையவர் போல, இவ்வுருத்திரரின் மேம்பட்டோர், அனந்தர் முதலிய வித்தியேசுரர் என்க.

தேவர்கள் மூலப்பிரகிருதிக்குமேலே செல்லமாட்டாராய், இறைவன் ஆணை உள்ளவழி, சிறிதுபோது சுத்த வித்தையிற் சென்று கடிதின் தம்மிடத்திற்கு மீளுதல் உடையர். உருத்திரர் அவ்வாறன்றிச் சுத்த வித்தையிலே வாழ்வர். ஆயினும், அதற்கு மேற் செல்லமாட்டாராய், இறைவன் ஆணை உள்ளவழி ஈசுர தத்துவத்திற் சென்று மீளச் சுத்த வித்தையை அடைவர். வித்தியேசுரர் ஈசுர தத்துவத்திலே வாழ்வர். மேன்மேல் உள்ள வர்கள் கீழ்க்கீழ் உள்ள உலகங்களிற் சென்று மீளும் உரிமை யுடையர். கீழ்க்கீழ் உள்ளவர்கள் அவ்வாறன்றி, மேலுள்ளவர் தம் ஆணையாலன்றித் தாமே மேற்செல்லும் உரிமையுடைய ரல்லர்.

ஈசுர தத்துவத்தில் மகேசுரனாய் நின்று அனந்தர் முதலி யோரைச் சுத்த வித்தை முதலியவற்றிற் செலுத்தி ஆள்கின்ற இறைவனும், சுத்த வித்தையில் உருத்திரனாய் நின்று உருத்திரர் கட்கு எளிதிலும், மால் அயன் முதலியோர்க்கு அரிதிலும் காட்சி யளித்து, அவர்க்கு வேண்டுவனவற்றை முடிக்கும் இறைவனும் பொருளால் வேறல்லராயினும், அவ்வச் சிறப்பியல்பு தோன்ற அவ்வந்நிலையில் அவனது வடிவும், பெயரும் வேறுபட்டு நிற்கும். கறைமிடறு உடைமையும், அஃது இன்மையுமே உருத்திர வடிவத்திற்கும், மகேசுர வடிவத்திற்கும் வேறுபாடாம். கறைமிடறு, நஞ்சுண்டமையை உணர்த்துவதாகலின், அது, மாசுடை உலகத்தார்க்கு அம் மாசு நீக்கி ஆளுதலுடைமையைக் குறிக்கும் சிறப்படையாளமாகும். ஆகையால் உருத்திரனாய் நிற்கும் இறைவன், 'சீகண்ட பரமசிவன்' எனப்படுவன்.

சீகண்ட பரமசிவனை யோக நிலையால் வழிபட்டோரும் அவனது உருவத்தையும் பெயரையும்பெற்று, 'சீகண்டருத்திரர்' எனப்படுவர்; ஆயினும் அவர்க்கு, 'பரமசிவன்' என்னும் பெயர் எய்துதல் இல்லை. ஆகவே, பரமசிவனாகிய சீகண்ட ருத்திரன் இறைவனும், சாரூப நிலையினால் அவனது உருவும்,

பெயரும் பெற்ற சீகண்ட ருத்திரர்கள் உயிரினத்தவரும் ஆவர். ஆதலின், மாசுடை யுலகத்தில் முத்தி அடையற்பாலோர்க்கு யாண்டும் சீகண்ட பரமசிவனே முன்னின்று முத்தியை யருளு வன்; ஏனைப் பயன்களை அடைய விரும்புவோர்க்குச் சீகண்ட பரமசிவனேயாதல், சீகண்ட ருத்திரர்களே யாதல் ஏற்ற பெற்றியான் முன்னின்று அருளுவர் என்க.

பெரிதாய் எல்லையின்றி நிற்கும் தூய உலகத்தின் ஒரு பகுதியே மாசுடை உலகமாதலின், மாசுடை உலகத்திலும் தூய உலகம் உண்மையும், தூய உலகத்தில் மாசுடை உலகம் இன்மை யும் வெளியாம். ஆகவே, மாசுடை உலகத்திலும் இறைவன் தனது சத்தியால் திருமேனிகொண்டு தோய்வற நிற்பனுதலின், 'மாசுடை உலகத்தில் பரமசிவனைக் காணுதலும், அவனை அணுகி நிற்றலும் கூடா' என்பதில்லை. அதனுல், அறுபத்துமூவர் நாயன்மார்க்கும், ஆளுடைய அடிகட்கும் வெளிநின்றருளியவன் பரமசிவனே யன்றி உருத்திரர் அல்லர் என்பதும், அவரெல்லாம் பெற்றது தூய உலகப் பேறேயன்றி மாசுடை உலகப் பேறன்று என்பதும் நன்கு துணியப்படும். இன்னும் இதனுனே, உலகப் பெருநலத்தின் பொருட்டு இறைவன் நிகழ்த்திய, 'வேகம், போகம், யோகம்' என்னும் முத்திறத்துப் பெருநிகழ்ச்சிகளாகப் புராணங்கள் கூறும் நிகழ்ச்சிகள் அனைத்தும் பரமசிவ னுடையனவேயன்றி, உருத்திரருடையன அல்ல என்பதும், மற்று ஓரோவோரிடத்து, ஓரோவொரு காலத்து ஓரோ ஒருவர் பொருட்டு நிகழ்ந்த நிகழ்ச்சிகளே உருத்திரருடையன என்பதும் தெரிந்துணர்ந்து கொள்ளப்படும்.

கற்பபேதம், சிருட்டிபேதம் முதலிய காரணங்களால் சிவாகமங்களுள் இவை பலதிறப்படக் கூறப்படுமாயினும், இங்குத் தெரித்துக் காட்டிய இவைகளே திருமுறைகட்கும், சிவாகமப் பொருள்களை வடித்தெடுத்துத் தெரிவிக்க எழுந்த சிவஞான சித்தி முதலிய சித்தாந்தப் பெருநூல்கட்கும் துணிபாதல், அந் நூல்களில் இனிது விளங்கிக்கிடப்பதாம். அதனுல், அந்நூல் கட்குப் பின்னரும், சிவாகமப் பொருளை நேரே உணரப் புகுந்து, வேறுகூற வேண்டா.

( தொடரும் )

RAJ BHAVAN
TRIVANDRUM
December 29, 1964.

Your Holiness,

Myself and Mrs. Giri enjoyed our stay at the Adheenam. We very much appreciated your reception to us. It is a matter for great pleasure that under the guidance of Your Holiness, the Adheenam and its properties are looked after in a most efficient way. It is the view of everyone-officials and non - officials - that the Adheenam is doing great service not only in the spiritual and religious field, but also in the social field by the establishment of various schools etc. I wish Your Holiness long life, so that you can render greater services to humanity.

Yours sincerely,

(Sd.) V. V. Giri
(GOVERNOR OF KERALA.)

# புனித வேள்வி

### வித்துவான். திருமதி. ப. நீலா

**மந்திரமாவதுநீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரமாவதுநீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமைபங்கன் திருவாலவாயான் திருநீறே.**

தெய்வத்தன்மை படைத்த வெண்ணீறுதான் எத்துணை ஆற்றலைப் பெற்றிருக்கின்றது! கூனை நிமிரச் செய்தது. சூலையைப் போக்கியருளியது. ஊமையைப் பேசவைத்தது. இறந்தவனை எழுப்பியது. எலும்பைப் பெண்ணாக்கியது. நஞ்சினை நீக்கியது. வஞ்சனை அமணை ஓட்டியது. இத்தகைய பேராற்றல் படைத்த வெண்ணீற்றை நம்பி வஞ்சகம் செய்த பொய்யர்களும் அவர்களின் தவவேடத் தன்மைக்கு மாசுவரக் கூடாதே என்பதற்காகத் தம்மையே அழித்துக்கொண்ட உண்மையடியார்களும் என்றும் நம் நெஞ்சில் இடம்பெற வேண்டியவர்களல்லவா!

பாரெல்லாம் போற்றும் பக்திநெறியைப் பரப்பவந்த சேக்கிழார் பெருமான் இத்தகைய பொய்யடியார்களையும் நமக்கு அறிமுகப்படுத்திவைக்கிறார். இவர்களின் வஞ்சக உள்ளம்தான் எத்துணை விசித்திரமானது!

**காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்**
**ஏதில ஏதிலார் நூல்.**

என்று தெய்வப்புலவர் வள்ளுவர் கூறுவார். ஒருவன் எதனை அதிகமாக நேசிக்கிறானோ அதனை மற்றவர்களிடம் வெளிப்படுத்துதல் கூடாது. அவன் எதன்பால் பற்றுள்ளம் கொண்டுள்ளான் என்பதை அயலார் அறிந்துவிட்டால், அதன்வழி புகுந்து அவனை அழித்துவிடுவர். இக்கூற்று எத்துணை உண்மையானது - வலிமையானது என்பதற்கு இனிவரும் பகுதிகள் சான்று பகரும்.

திருநீற்றிடத்திலே மாளாக் காதல் கொண்ட மன்னர்கள், சிவவேடத்தையே செம்பொருளாக மதிக்கும் மனப்பக்குவம் கொண்டிருந்தார்கள். அத்தகையோரில் சேதி நாடாண்ட செம்மலும் ஒருவர். திருநீறணிந்து, தவக்கோலம் கொண்டவர் யாராயிருந்தாலும் தடையின்றி அரண்மனைக்குள் எப்பொழுது வேண்டுமானாலும் வந்து அரசனைக் காணலாம் என்று விதி செய்திருந்தார் மெய்ப்பொருளார். இதையறிந்த அவரது பகைவன் முத்திநாதன் தவவேடம் கொண்டு உட்புகுந்து எண்ணிவந்த காரியத்தைச் செய்து முடித்தான். உடற்புறத்தில் வெண்ணீறணிந்து வந்த கயவனின் உள்மனமோ கருமைக்கிடந்தந்திருந்தது. அங்கிலே 'மைபொதி விளக்கு' என்று சுட்டப்பட்டது.

'மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைகரந்த புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்திநாதன்'

என்கிறார் சேக்கிழார் பெருமான்.

காலமல்லாக் காலத்தில் வந்தும் அவரை வரவேற்று உபசரித்து, அருகிருந்த அரசமாதேவியையும் அப்புறம் போகச் செய்து அரும்பொருளை உபதேசிக்கப் போகிறார் என்றெண்ணி அவர் அடியின்கீழே அமர்ந்து வணங்கிய மெய்ப்பொருளாரை வஞ்சகன், புத்தகம் பிரிப்பான் போல் உடைவாளுருவி அதனை உரத்தில் சேர்த்தான். அச் செயலுக்காக அவனை வெட்டப் புகுந்த காவலாளியாகிய தத்தனை 'தத்தா, நமர்' என்று தடுத்து, சிவவேடமணிந்தவருக்கு யாரும் ஊறு செய்யாவண்ணம் காப்புடன் அழைத்துச்சென்று ஊரின் வெளியில் விட்டுவா என்று கட்டளையிட்டார் என்று அறிந்தால் அந்தத் தொண்டர் தம் பெருமையை எப்படி விளம்புவது! இதனை நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிடுகிறார்:

'கற்றநன் மெய்த்தவன் போலொரு பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை யவனைச் செறப்புகலுந் திருவாய்
மற்றவன் தத்தா நமரே யெனச் சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொருளா மென்று பேசுவரே'

வெண்ணீற்றின் ஒளியிலே விழுப்பொருளைக் கண்ட மற்றொருவர் எண்டிசையும் ஏறியசீர் மூதூர் எயினனூர் தந்த ஏந்தல் ஏனாதி யார். மன்னர்குல இளைஞர்களுக்கு வாட்படை பயிற்றும் ஆசிரியத் தலைமைபெற்றவர். வாளின் படைபயிற்றி வந்த வளம் எல்லாம் - தாளும் தடமுடியும் காணாதார், தம்மையும் தொண்டாளும் பெருமான் அடித்தொண்டர்க் காக்கி அகமகிழ் வார். தொன்மைத் திருநீற்றின் தொண்டின் வழிபாட்டின் நன்மைக்கண் நின்ற நலம் என்றும் குன்றாமல் வாழும் இவ ருக்குத் தாயத்தான் அதிசூரன் என்பவன். அழுக்காறு, அவா, வஞ்சம் எல்லாம் ஒன்றெனத் திரண்ட உருவமுடையான். தங்கள் குலத் தாயத்தின் ஆனாத செய்தொழிலாம் ஆசிரியத் தன்மைவளம் ஏனாதிநாதர்பால் மிகவே, அவர்பால் இகல் கொண்டான் அதிசூரன். கதிரோன் காலைஎழ மழுங்கிக் கால் சாயும் மதியை ஒத்திருந்தது அவன்நிலை. இந்நிலையில் ஆசிரியத் தலைமையைப்பெற எண்ணிய அதிசூரன் சுற்றப்பதியோருடன் கூட ஏனாதிநாதருடன் போர்புரியத் துணிந்தெழுந்தான்.

'வாள்கொண்ட தாயம் வலியாரே கொள்வது' என்ற முடி வுடன் ஏனாதிநாதரைப் போருக்கழைக்கிறான்.

வெங்கண் புலிகிடந்த வெம்முழையில் நின்றழைக்கும் பைங் கண் குறுநரியென்ன நின்றான் என்கிறார் ஆசிரியர். ஒலிகேட்ட அளவிலே பொர அழைத்தவர் யார் என்று கேட்டுக்கொண்டே வார்கழல் கட்டி, வடிவாள் பலகையொடு போர்க்களம் நோக்கி வந்தார் ஏனாதிநாதர். அவருடைய மாணவர்களும், மற்றவர் களும், போர் ஒலிகேட்டுச் சூழ்ந்து கொண்டார்கள். இருபக்கத்துப் படையும் ஒன்றுடன் ஒன்று கைகலந்து அமர் செய்தது. போர்க்களத்தில் ஏனாதி நாதர் முன்பு நிற்க மாட்டாத அதிசூரனும் - அவனது படைகளும் மெய்யுணர்வின் முன் நிலைக்காத குற்றங்களைப் போல ஓடிப் போனார்கள். அதிசூரனும் பின் புறங்காட்டி ஓடத்தலைப்பட்டான்.

'தலைப்பட்டார் எல்லோரும் தனிவீரர் வாளின்
கொலைப்பட்டார் முட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட ஆர்வமுதல் குற்றம்போல் ஆயினார்,'

அன்று இரவு மண்படுத்த அதிசூரன் கண்படாதவனுகி ஈனமிகு வஞ்சனையால் வெல்வது என்று முடிவு செய்தான். அதன்படி காலையில் ஏனுதிநாதரிடம் நாட்டாரைக் கொல்லாமல் இருவரும் வேறிடத்தில் அமர்விளைப்போம் என்று சொல்லி யனுப்பினுன். அதற்கும் இசைந்த ஏனுதிநாதர் சுற்றத்தார் அறியாவகை புறப்பட்டுக் குறித்த களத்தில் வந்து விடக்கை எதிர்பார்த்திருக்கும் வேங்கையென நின்றிருந்தார்.

தீங்கு குறித்தழைத்த தீயோனும் அதிசூரன் 'திருநீறு தாங்கிய நெற்றியினுர் தங்களையே எவ்விடத்தும் ஆங்கவரும் தீங்கிழையார் என்பதறிந்தானுய்.'

**வெள்நீறு நெற்றி விரவப் புறம்பூசி**
**உள்நெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன்கொண்டு**
**வண்ணச் சுடர்வாள் மணிப்பலகை கைக்கொண்டு**
**புண்ணியப்போர் வீரர்க்குச் சொன்ன இடம்புகுந்தான்.**

திருநீற்றையே தீண்டியறியாதவன் இன்று நெற்றி நிறைய நீற்றைப் பூசியிருக்கிருன். வெளியிலே தூயதிருநீறு - உள்ளத்திலே வஞ்சகம். அங்கேகண்ட முத்திநாதனின் முத்திரையை ஆசிரியர் சேக்கிழார் இங்கேயும் மறவாமல் பதிக்கும் திறம் எண்ணி எண்ணி இன்புறவேண்டிய தொன்ருகும்.

**மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்**
**பொய்தவ வேடங் கொண்ட முத்திநாதனை ஒப்ப.**

போர்க்களம் புகுந்தான் அதிசூரன். நெற்றியிலே பூசப் பட்டிருக்கும் திருநீற்றைப் பலகையால் மறைத்துக்கொண்டே போர் செய்யத் தொடங்கினுன், வாள்வீசுவதில் வல்லவரான ஏனுதிநாதரை இனியும் எதிர்த்துநிற்றல் இயலாது என்பதைப் புரிந்துகொண்ட வஞ்சகன் அவர் கொல்ல நெருங்கி வருங்காலை - நெற்றியை மறைத்திருந்த பலகையைப் புறம்போக்க, அதனைக் கண்டு, 'ஆ! கெட்டேன்' என்று ஏனுதிநாதர் உணர்விழந்தார். கடையவன் தன் நெற்றியின்மேல் வெண்ணீற்றைக் கண்டவுடனே இவர் அண்டர்பிரான் சீரடியார் ஆயினுர் - இனி இவர் கொள்கைக்குறி வழி நிற்றலே அறன் என்பதுணர்ந்து, வாளும் பலகையும் கொண்டு போர் செய்வார்போலப் பாவனை செய்தார்.

நிராயுதரைக் கொன்ருர் எனும் பழி அதிசூரனிடத்தில் நிலேத்து விடக்கூடாதல்லவா? அதற்காகவே அந்தப் பாவனே. ஏனுதிநாதனுரின் உள்ளப் பாங்கை எண்ணிப் பார்த்தல் நன்று.

நெய்வாளுடன் அடர்த்து நேர்வார் போல் நின்ற தொண்டனுர் திருவுள்ளம் எண்ணியதறியாமல் முன்னின்ற பாதகனும் தன் கருத்தை முற்றுவித்தான். திருநீற்ருெளியின்பின் வஞ்சக நெஞ்சம் மறைய, பாதகம்செய்த பாவியர்களுக்காகத் தங்களேயே தவ வேள்வியாம் புனித வேள்வியில் மாய்த்துக்கொண்ட பெருந்தகையாளர்கள் மெய்ப்பொருளாரும் ஏனுதிநாதரும். பெரியபுராணக் காப்பியம் காட்டும் தூய சிவனடியார் திருக்கூட்டத்தில் முழுநீறு பூசியவர்களும், நம்மால் வணங்கப்படும் தகுதிபடைத்தவர்களே.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasihanam, Tiruvaiyaru.

1964 டிசம்பர் 28உ சென்னே தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலேயச் சார்பில் தவத்திரு. சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் தலைமையில் அன்பர்கள் அறுபதின்மருடன் சோழநாட்டுத் தலங்களே வழிபடும் முறையில் திருவையாற்றுக்கும் வருகின்ற பேறு அடியேனுக்குக் கிடைத்தது. தென் கயிலாயம் என்று சிறப்பிக்கப்படும் இத்திருத்தலத்திலுள்ள மிகப் பெரிய திருக்கோயில் ஏனேய தருமபுர ஆதீனத் திருக்கோயில்களேப்போலவே மிகவும் தூய்மையாகவும், மக்கள் உள்ளத்தைப் பெரிதும் கவரக்கூடிய வகையிலும் வைக்கப்பட்டு இருப்பதைக்கண்டு மிகவும் மகிழ்ந்தேன். தெய்வத் திருமேனிகள் நன்முறையில் வைக்கப்பெற்று காண்பார்க்குப் பக்திபரவச மூட்டுவனவாக இருக்கின்றன. தேவஸ்தான நிர்வாகத்தின் திறன் அன்ருட வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும், எங்கள் திருக்கூட்டத்தை வரவேற்ற முறையிலும், நன்கு வெளிப்பட்டது. இவ்வகையான நிலேமைகட்கு காரணமாக இருந்து அருளாட்சி செய்துவரும் தருமை ஞான முதல்வர் ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமகாசந்நிதானத்தின் பேரருளே நினேந்து வழுத்தினேன்.


(Sd.) K. Kamalakkannan, M. L. C.
29–12–64. Madras.

திருக்கயிலாயபரம்பரைத்
தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி
ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்
நிகழ்ந்த பாவை மாநாட்டில்



அறநிலைய ஆணையர்
திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A. B. L.
அவர்களுக்கு
ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
பொன்னாடைபோர்த்து மலர்மாலை சூட்டுதல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான
சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில்



அறநிலைய ஆணையர்
திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L. அவர்கள்
தலைமையில் பாவை மாநாடு.

# தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

( மலர் 24. இதழ் 1. பக்கம் 27 இன் தொடர்ச்சி )

தமிழ்நாட்டு முத்துக்கள் தரணி போற்றும் தரம் வாய்ந்தவை. பாண்டிநாட்டு முத்துக்களை ஏற்றிச் சென்ற வெளி நாட்டார் மரக்கலங்கள் பலப்பல. தென்கடலில் கிடைக்கும் முத்து உலகில் கிடைக்கும் முத்துக்களுள் மிகச் சிறந்ததாம். முத்தினைப்பற்றி மொழியும்போதெல்லாம் பாவல்லார் தென் கடல் முத்து என்றுதான் குறிப்பிடுகின்றனர்.

'' தென்கடல் முத்தும் குணகடல் துகிரும் ''
( பட்டினப்பாலை 183 )

என்று கடியலூர் உருத்திரங்கண்ணனாரும்,

'' தென்கடல் முத்தும் தென்மலைச் சந்தும் ''
( வேனிற்காதை 19 )

என்று இளங்கோவடிகளும்,

'' தென் பௌவத்து முத்துப் பூண்டு '' ( புறம் 380 )

என்று கருவூர்க்கதப் பிள்ளையும் கூறியிருத்தல் அறிக.

தெற்குக் கடற்கரையில் அமைந்திருக்கும் பட்டினந்தான் செழியர் மறத்திற் காக்கும் கொள்கை. இங்கே கிடைக்கும் உயர்ந்த முத்துக்கள்பற்றி இலக்கியம் விரிவாகப் பேசுகிறது.

'' விளைந்து முதிர்ந்த வருமுத்தின்
இலங்குவளை இருஞ்சேரிக்
கட்கொண்பூக் குடிப்பாக்கத்து
நற்கொற்கை '' ( மதுரைக் காஞ்சி 135-38 )

என்று கூறுகிறார் மாங்குடி மருதனார்.

" முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்துறை "
( நற்றிணை 23 )

" அலங்கிதழ் நெய்தல் கொள்கை முன்துறை
இலங்கு முத்து " ( ஐங்குறு 185 )

என்பனபோன்ற அடிகள், கொற்கையின் முத்து வளத்தை விளக்கும்.

தமிழகத்துச் சான்றோர், நிலத்தைக் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை என ஐம்பிரிவுகளாக வகுத்திருப்பது யாவரும் அறிந்ததே. இவ்வைவகை நிலவளமும் ஒருங்கே காண வேண்டுமாயின் பாண்டியநாடு செல்லவேண்டும். அங்கே, அருவி இழிதரும் அருவரை உண்டு. செந்நெலும் கன்னலும் செழித்திருக்கும் செருவும் உண்டு. கோவலர் முல்லை, குழலில் இசைக்கும் புலமும் உண்டு. கவின் விளங்கு மூரல் பிறக்கும் கடலும் உண்டு. பருந்து நிழலன்றிப் பனிநிழலறியாப் பாலையும் உண்டு. ஆகவே, மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் பாண்டியநாட்டை " ஐம்பால் திணையும் கவினி " என்று சிறப்பிக்கின்றார். பாண்டியற்குப் பஞ்சவன் என்ற பெயரும் உண்டு. ஐவகை நிலவளமும் ஒருங்கே அவன் நாட்டில் அமையப்பெற்றிருப்பதால், அவற்குப் பஞ்சவன் என்று பெயர் வந்ததாகக் கூறுப. இனி மாங்குடி மருதனார் காட்டும் ஐவகை நிலத்தின் பாங்கும் இனிது காண்போம்.

பெருமழை நன்றாகப் பிடித்துக்கொள்கிறது. ஆகவே. ஆறுகளும் குளங்களும் நிரம்பி வழிகின்றன. ஆறுகளையும் குளங்களையும் நிரப்பிய நீர் பின்னும் கீழ்கடல் நோக்கிப் பரந்து செல்கிறது. நீர்வளத்தால் நெற்கதிர் யானையை மறைக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது. அவ்வாறு வளர்ந்த கழனிகளிலும் மடுக்களிலும் மீன் பிடிக்கின்றனர். நெய்தலும் நீலமும் ஆம்பலும் அழகுத் தாமரையும் இன்னும் மணங்கமழ் பூக்கள் பலவும் மலர்ந்திருக்கும் பொய்கைகளிலிருந்து மீனை முகந்து கொண்டு சென்று விற்கின்றனர். அம் மருதநிலத்தில் பல்வேறு ஒலிகள் எழுகின்றன. மீனைக் கொன்று குவிக்கும் ஓசை ஒருசார் கேட்கிறது. இன்னொரு பக்கம் கரும்பை அறைக்கும் எந்திரம் எழுப்பும் பேரொலி. இவையே அன்றி அங்கே கள்ளுண்டு களமர் செய்யும் ஆரவாரமும் கேட்கிறது. (" குணகடல்..... தண்பனை " மதுரைக்காஞ்சி. )

மீனைக் கொல்வார் ஓசையும், கரும்பின் எந்திர ஓசையும். கள்ளுண்ட களமர் ஓசையும், களைபறிப்பார் ஓசையும், பரங்குன்றத்து விழா ஓசையும், மகளிர் மணபாறரொடு நீராடும் ஓசையும் எழுந்தோங்கி வான்முட்டி வாழ்வார்க்கு இனிதாக ஒலிக்கும் மருதவளம் ஒருபக்கம்.

சிறுதினை, கொய்யும் பருவத்தில் இருக்கிறது. எள்ளின் காய்கள் நன்கு முற்றியுள்ளன. வரகுக் கதிர்கள் அறுக்கும் பதமாக முதிர்ந்துவிட்டன. ஆழ்ந்த குழியில் அழகு மணி திகழ்கிறது. நௌவிமான் தனது நெகிழாத் துணையோடு துள்ளுகிறது. ஒளி மலர் பூத்த கொன்றை குளிர் நிழல் பரப்புகிறது. அந்த நிழலில் பாறை அழகுபெற்று விளங்குகிறது. வெள்ளியின் நிறம் விளங்கு முல்லைப் பூக்கள் உதிர்ந்து பரந்து கிடக்கின்றன. தெளிந்த புனல் தங்கும் பள்ளத்தில் தெரிகிறதே அது நிலமணி அல்ல; நீலமணியோ எனக் கண்டாரை மருளச் செய்யும் நெய்தல் மலர்கள் பூத்துவிளங்குகின்றன. முல்லைதரும் மோகனக் காட்சி இது. (''சிறுதினை..... புறவு'' மதுரைக். 271 - 285.)

நறுமண ஆரமும் அகிலும் வெட்டி, மேட்டு நிலத்தில் விதைத்த தோரை நெல்லும் வெண் சிறு கடுகும், ஐவனவெண்ணெலும், இஞ்சியும் மஞ்சளும், மிளகுக் கொடியும் வேறு பலவும் கற்றரையில் குவிக்கப்பட்டிருக்கின்றன. அவரைக் கொடியைத் தின்னவரும் ஆமாவை ஓட்டும் கானவர் ஆரவாரம் கேட்கிறது. பொய்க்குழியில் வீழ்த்திய ஆண் பன்றியைக் குறவன் கொல்லும் ஆரவாரம் எங்கும் சூழ்கிறது. விளங்கிழை மகளிர் புலி புலி என ஒலி எழுப்பி வேங்கை மலரைப் பறிக்கின்றனர். அருந்திறல் புலியொன்று கருநிறப் பன்றியைக் கொல்லும் ஆரவாரமும் எழுகிறது. அருவிவீழ் அடுக்கத்துக் குறிஞ்சி, அன்ன தன்மைத்தாம். (''நறுங்காழ்......வெற்பு'' மதுரைக், 286 - 301.)

பெரும் மூங்கில்களிற் பிறந்த நெருப்பு, பசிய புதர்களைச் சுடுகிறது. பயிரின்றித் தட்டை கவினழிகிறது. மேயத்தகுந்த இடம்நாடி வேழங்கள் செல்கின்றன. கடல்போலக் காற்று ஆரவாரிக்கிறது. வழிபல கூடும் இடத்தைத் தாழை அணிந்த வன்சொல் இளைஞர் வில்லேந்திய கையினராய்க் காத்து நிற்கின்றனர். அன்னார், இலையால் வேய்ந்த குடிசையில் இருக்கும்

மான் தோலாகிய பள்ளியினை உடையார். இதுதான் நிழலுரு விழந்த வேனிற்குன்றத்துப்பாலை. ("இருவெதிர்ப்......அரம்" மதுரைக். 302 - 314.)

கடல் தந்த ஒளி முத்தும், கவின் மிக்க நல்வளையும், வெள்ளுப்பும் விரும்பிடும் புளியும், கருவாடும் கலங்களில் ஏற்றப்பட்டிருக்கின்றன. இவ்விடத்துப் பேரணிகலங்களை எடுத்துச் செல்லும் பொருட்டு யவனம் முதலாகும் நாடுகளினின்றும் குதிரைகள் ஏற்றிய மரக்கலங்கள் மீகாமரால் செலுத்தப் பெற்று வந்திருக்கின்றன. இவ்வாறு நாடோறும் வளம்பல இயன்று சிறப்புற்றுத் திகழ்கிறது நெய்தல். ("முழங்குகடல்... ...பயின்று" மதுரைக். 315 - 325.)

பல்வளங்களும் பெற்றுத் தமிழகம், பசியெனல் அறியா நாடாக இருந்தது. அகத்தில் மாமூலனார் சேரநாட்டை அழைப்பதுபோல், "பசியென அறியாப் பணைபயில் இருக்கை" என்று தமிழ் நாட்டை அழைப்பது சாலப் பொருந்தும். இயற்கை வளத்தின் இருக்கையாகத் திகழ்ந்ததால்தான், மக்கள் தேவைகளும் நிறைவுற்று வாணிகமும் ஏற்றம் பெற்றது. நாட்டின் செல்வச் செழிப்புக் காரணமான வாணிக வளர்ச்சியை நாம் காணவேண்டாமா?

(தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I came here with a batch of boys and staff of the Ramakrishna Mission Students Home, Madras and we had the sacred privilege of worship in this holy shrine. The superintendent and the other employees in the temple were all kindness to the party. The temple premises are kept most clean and tidy and this contributes to the divine atmosphere that is prevalent here.

(Sd.) S. Krishna Iyer,
Secretary, Ramakrishna Mission, Madras.

# இராமேஸ்வரத்தில் புயலின் விளைவு

இராமேஸ்வரம் நம் நாட்டில் விளங்கும் புண்ணியபூமிகளுள் ஒன்று. தல தரிசனம் செய்பவர்கள் இராமேஸ்வரத்தையும் முக்கிய தலமாகக் கொள்வர். அங்கு அண்மையில் ஏற்பட்ட இயற்கைக் கோளாறுகளால்-புயலாலும், கடல்கொந்தளிப்பாலும் பெரும் சேதம் ஏற்பட்டது நமக்கு அதிர்ச்சி தருகின்றது. இத்தகைய விளைவு நம்மைத் துன்பக்கடலில் ஆழ்த்துகிறது. ஆக்குவதும் அழிப்பதும் தன்னாலே நிகழ்கின்றது என்று எண்ணிச் செயல்படுபவர்கள் பலர். அவர்களும் இத்தகைய இயற்கையின் சீற்றத்தைக் கண்டு அஞ்சுகின்றனர். அதைப் போக்க அவர்களாலும் ஒன்றும்செய்ய இயலாத நிலையேற்படுகிறது. அத்தகைய செயலற்ற நிலையில்தான், ஆக்கல் அழித்தல் முதலிய செயல்களைப் புரிகின்றவன் நமக்கு அப்பாற்பட்ட நிலையில் ஒருவன் இருக்கின்றான் என்று எண்ணி அவனை வழிபடுகின்றனர். துன்பக் காலத்திலும் இன்பக் காலத்திலும் துணையாக நின்று அருள்புரிபவனாகிய பெருமானை இத் துன்பக் காலத்தில் துணையாகப்பற்றி வழிபடுவதே நாம் செய்யக் கூடியது.

‘அவனன்றி ஓர் அணுவும் அசையாது’ என்பது முன்னோர் வாக்கு. எல்லாப் பொருள்களும் அணுக்களின் கூட்டமே. அதனால், எந்தப் பொருளோ அல்லது பொருளின் பாகமோ அசைய வேண்டுமானால் அவன் - ஆண்டவன் அசைத்துத்தான் அசைய வேண்டும்.

அணு, சிறியது; ஆனால் இன்றைய உலகம் அணுவை நினைத்துத்தான் அஞ்சுகிறது - ஏங்குகிறது. ஆனால், அணுவளவான சிறிய பொருளோ அல்லது மலையளவான பெரிய பொருளோ அசைவது அவன் அசைவினாலேதான் என்பதை உணர மறுக்கின்றது.

அணுவுக்கு அணுவாய், மகத்துக்கு மகத்தாய் இருந்து, எல்லாவற்றையும் அசைப்பது - ஆட்டுவது, இறைவனுக்குத் திருவிளையாட்டு - கூத்து. அக் கூத்தும் அருட்கூத்துத்தான், ஆண்டவனது கூத்து அமைதிக் கூத்து; ஆனந்தக் கூத்து ஆனால், சில சமயம் அவன் தனது கூத்தினைக் கோரக் கூத்தாக

ஆக்குகிருன். அத்தகைய கோரக்கூத்தின் விளைவே, நம் தமிழகத்தின் தென்கோடியில் நிகழ்ந்த பெரும்புயலும், கடலின் கொந்தளிப்பும்.

இவைகளை வருணிக்கும் சொற்களைக் கேட்கும்போதும், எழுதுகின்ற எழுத்துக்களைப் படிக்கும்போதுமே நெஞ்சம் திடுக்கிடுகின்றது என்ருல், நேரில் கண்டு அவதிக்கும், அல்லலுக்கும் உள்ளாகிய மக்களது நிலையை நினைத்துப்பார்க்கவும் முடியவில்லை.

இக் கோரத்திற்கு உள்ளாகி, ஒழிந்த மக்கள் எத்துணைப் பேர்? பொருட்கேடு எவ்வளவு! தனுஷ்கோடி - இராமேசுவரம் தீர்த்த யாத்திரைத் தலம். அத்தகைய தலங்களில் அன்புகொண்டு நீராடினல்தான் பெரும்பயன் விளையும், அன்பில்லாது கோடி தீர்த்தங்களில் நீராடினுலும் பயனில்லை. என்ற கருத்துப்பட அப்பர் சுவாமிகள் கூறியுள்ளார்கள். அவ்வாறே அன்போடு நீராடி வழிபட்டு, இராமர், இராவணனை அழித்த பாவத்தைத் தொலைத்த இடமாகிய இராமேஸ்வரத்தில் சேதுஸ்நானம் செய்து இராமேசுவரரைத்தரிசித்தால் எல்லாப் பாபங்களும் நீங்கும் என்று. பாரதநாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து சமுத்திர ஸ்நானம் செய்து, இராமேஸ்வரரை மக்கள் தரிசித்துச் செல்வார்கள். அந்த இடம் இப்பொழுது எவ்வாறிருக்கின்றது? கடல் அலைகளுக்கு உள்ளாகி, பல சிறு திடல்களாகக் காட்சியளிக்கின்றது. போவதற்கு வழியில்லாதிருக்கின்றது. 100 மைல் வேகத்தில் வீசி, கடல் அலைகளை வானளாவ எழுப்பிச் சீறிய புயல் எவ்வாறு தணிந்தது? அதுதான் அதிசயிக்கத் தக்க ஒன்று. கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு ஏதேனும் தீமைகள் உண்டாகும் நிலை ஏற்பட்டால் ஸ்ரீ இராமநாதப் பெருமானுக்கு அருச்சனை ஆராதனைகள் செய்து அப்பிரசாதங்களைக் கடலில் இடுவது வழக்கம். அம்மரபுப்படி இப்போதும் புயல் கொடுமையால் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டபோது பெருமானுக்குச் சிறப்பு வழிபாடியற்றி அர்ச்சனைகள் செய்து பிரசாதங்களைக் கடலுக்குச் சமர்ப்பித்தனர். சில நிமிஷங்களிலேயே புயல்வேகம் தணிந்தது. கடல் கொந்தளிப்பு அடங்கியது என்று வெளியான செய்தி தெய்வீக ஆற்றலை மக்களுக்கு உணர்த்திய நிகழ்ச்சியாகக் கொள்ளலாம். இதனுல் இறைவன் கோரக் கூத்து அமைதிக் கூத்தாக மாறியது.

புயலுக்கும், கடல்கோளுக்கும் உள்ளாகி மறைந்தவர் போக, எஞ்சியுள்ள மக்களின் நிலை பெருஞ் சோகக் காட்சியாய்

உள்ளது. இருக்க இடம் இல்லை; பட்டினியால் பரதவிப்பு, உடை இல்லை. கடலின் முற்றுகையைக் கடந்து மீள வழியில்லாது ஏக்கம்.

இவற்றையெல்லாம் தெரிந்த உடனே, அரசாங்கம் விரைந்தது. ஈர நெஞ்சுடையோர் பலர் இரங்கி, உணவும் உடையும் அனுப்பினர். நன்கொடைப் பணங்கள் அரசியல் அதிகாரிகளிடம் வந்து சேர்ந்தன. தனுஷ்கோடி மக்களின் தவிப்பைச் செய்தித்தாளில் கண்ட உடன், கருணைவடிவாய் எழுந்தருளியுள்ள திருத்தருமையாதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் மக்கள் அல்லலைப்போக்கத் திருவுளம்கொண்டு ரூபாய் ஐயாயிரத்தை நம் மாநில முதல் அமைச்சருக்கு அருட்கொடையாக அனுப்பினார்கள்.

மீட்பு வேலைகள் முடிந்து, மறுவாழ்விப்பு வேலைகள் துவங்கப் பெறுவதால், தனுஷ்கோடி முன்போலவே சிறந்த யாத்திரைத் தலமாக அமையவும், தனுஷ்கோடி மக்கள் நல்வாழ்வு பெறவும், ஆண்டவனது அமைதிக் கூத்தினை - ஆனந்தக் கூத்தினை வேண்டுவோமாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

I had been to this temple several times before since 1929. The sacred precincts has attracted me almost every year. During my prayer I try to pray to Sri Abiramiamman daily. To-day, by God's grace, the 60th birthday was celebrated in accordance with the tradition and custum, prevailing in this temple. Sri La Sri Mahasannidhanam has informed of my visit to the authorities here and the ceremony was proposed with the kind help of all those in the temple. May they be of help to all those who may go over here for such purpose.

(Sd.) M. S. Palaniappan,
21—12—64.

மாயூரம் – வள்ளலார்கோயிலில்

## தருமையாதீன ஸ்தாபனங்கள் சார்பில்

# பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீன ஸ்தாபனங்கள் சார்பில் மாயூரம் வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேஸ்வரசுவாமி ஆலயத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாணையின் வண்ணம் திருவெம்பாவை - திருப்பாவை மாநாடு டிசம்பர் 27, 28. 29 ஆகிய மூன்று நாட்களில் மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது.

ஸ்ரீ வதான்யேஸ்வர சுவாமி ஆலயத்தின் மேலைத் திருச்சுற்றில் மாபெரும் மாநாட்டுப்பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பந்தலின் உட்பகுதிகள் கண்கவர் மேற்கட்டிகளாலும், ஒள்ளிய திரைச்சீலைகளாலும் வண்ண வண்ணக் காகிதங்களாலும் தோரணங் கட்டி அழகுற அலங்கரிக்கப்பட்டுக் கண்டோர் கருத்தைக் கவருவதாக அமைந்திருந்தது. மாநாட்டுப்பந்தலின் முகப்பு மாடமென அலங்கரிக்கப்பட்டு பல்வண்ணத் தொடர் விளக்குகளாலும், ஒளியுமிழும் பல மின் விளக்குகளாலும் பேரொளியுடன் திகழ்ந்தது.

அத்தகு மாநாட்டுப் பந்தலில் 27—12—64 ஞாயிற்றுக்கிழமை காலை தொடங்கிய மாநாடு மூன்று நாட்கள் நிகழலாயிற்று. மாநாட்டில் திருவெம்பாவை திருப்பாவை பற்றிய பேரறிஞர்களது சொற்பொழிவு நிகழ்ச்சிகளும் பொம்மலாட்டம் பாவை இன்னிசை மற்றும் கதாகாலட்சேபம் முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. மாயூரம் மற்றும், சுற்றுப்பட்ட சிற்றூர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான அன்பர்கள் திரண்டு வந்து மாநாட்டிற் பங்கு பற்றி இறையருளுக்குப் பாத்திரமாயினர். 27-12-64 ஞாயிற்றுக்கிழமை காலையிலும் 29-12-64 செவ்வாய்க்கிழமை இரவிலும் திருமுறை திருவீதியுலா பண்ணிசைப் பாராயணத்துடன் நடைபெறலாயிற்று.

27—12—64 ஞாயிற்றுக்கிழமை காலை தொடங்கிய மாநாட்டில், வைத்தீஸ்வரன்கோயில் கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், சென்னை

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., அவர்களையும், சொற்பொழிவாளர்களையும், பொதுமக்களையும் வரவேற்று, மாநாட்டின் அவசியம் பற்றிக் குறிப்பிட்டு ஆணையர் அவர்கட்கு மலர்மாலைசூட்டி மாநாட்டைத் தொங்கிவைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L.. அவர்கள், மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் "நமது சமயம் உலகப் பெருஞ்சமயங்களுள் ஒன்று. அதன் பழமைபற்றி ஒன்றும் அறிய முடியவில்லை, சைவமும் - வைணவமும் நம் இரு கிளைச் சமயங்களாகும். இவற்றுள் உயர்ந்தது எது என்பது பற்றிய ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. பண்டைக் காலத்தில் சைவ வைணவர்களுக்கு இடையே வேற்றுமை நிலவ இல்லை. இடைக்காலத்தில் மாறுபாடும் பூசல்களும் எழலாயின. நம் பண்டைச் சமயங்களாகிய இவை எத்தனையோ எதிர்ப்புக்களைத் தாண்டி இன்றும் நின்று நிலவுகின்றன. ஆங்கிலேயர்களது ஆட்சிக் காலத்தில் நம் சமயத்தை ஒழித்துக்கட்ட அவர்களும், பாதிரிமார்களும் கொண்டிருந்த முயற்சிகள் பற்றிய திடுக்கிடும் செய்திகள் இன்று நமக்குக் கிடைக்கின்றன. நம் இந்து சமயத்தை ஒழித்து இந்த நாடெங்கும் தங்கள் கிருத்துவக் கொடியை நாட்டுவதே ஒவ்வொரு ஆங்கிலேயனின் கடமை என்று ஒரு பாதிரி எழுதுகிறார். எப்படியோ நம் பெருஞ் சமயம் கடவுளருளால் இன்றும் நிலைபெற்றிருக்கிறது. இருபெரும் பிரிவான சைவ - வைஷ்ணவத்திடையே ஒற்றுமை நிலவ வேண்டுமென்பதே இந்தப் பாவை மாநாட்டின் நோக்கம். சைவரும், வைஷ்ணவரும் ஒன்றுபட்டு நம் சமயத்தை வளர்த்து மக்களை நல்வழிப்படுத்த வேண்டும். அதற்கு இத்தகு மாநாடுகள் பயன்படுமென்பது என் திடமான நம்பிக்கை. இந்த மாநாட்டை ஏற்பாடு செய்த ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும் உரியது" என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்துக் காலை நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேருரை நிகழ்த்திய, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், சைவ இலக்கியப் பேறறிஞர், டாக்டர், திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள் "மார்கழி நீராடல்" என்ற பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது. "மார்கழி நீராடல் என்பது இன்று நேற்று ஏற்பட்டதன்று. சங்கத்தமிழ் நூல்களிலெல்லாம்

மார்கழி நீராடல் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சங்ககாலத்தில் மார்கழி நீராடிய பெண்கள் ஐந்து வயதுக்கு மேற்பட்டு எட்டு அல்லது ஒன்பது வயதுக்குட்பட்டவர்களே! அவர்கள் நீராடி வேண்டியதெல்லாம் 'நாடுமலிய நல்லமழை வேண்டும்' என்பதே. காலச் சுழற்சியில், பருவமடைந்த மங்கையர்களும் இந்நீராட்டில் பங்கேற்றனர். பொதுநலத்தோடு சுயநலமும் கலந்தது. நாடு மலிய நல்ல மழை வேண்டும் என்பதோடு, நல்ல கணவனையும் வேண்டி மார்கழி நீராடினர் பெண்கள். அந்தக்கால நாட்டைத் திருவெம்பாவை - திருப்பாவைகளிற் காண்கின்றோம். சைவ - வைணவ ஒற்றுமையே இம் மாநாட்டின் நோக்கமாயினும், வைணவர்களைக் காட்டிலும் சைவர்கள் சமய அளவில் கொஞ்சம் தாராள மன முடையவர்கள் என்பது என் கருத்து.

சங்ககாலத்திலும், அதற்குப் பின்னும்கூட வைணவ - சைவ சமயங்களிடையே ஒற்றுமை நிலவின. பௌத்தர்களும் சமணர் களுமே பொது எதிரிகளாக இருந்தனர். ஆழ்வார்கள் காலத்தில் கூட சைவ - வைணவர்களிடையே ஒற்றுமை நிலவியது. அதற்குப் பின்னரே சைவ - வைணவக் காழ்ப்பு மிகலாயிற்று.

இவையெல்லாம் நான் சொல்ல இல்லை. அவர்களது பாடல்களே சொல்கின்றன. நம்முடைய சமயம் தோற்ற வரம்பறியலாகாத் தொன்மைத்து. ஆதிச்சநல்லூர் புதைகுழிக் கண்டெடுப்புக்களும், ஹரப்பா, மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியும் நம் சமயத்தின் தொன்மையையும் விரிவையும் கி. மு. பல ஆயிரம் ஆண்டுகட்கு முற்கொண்டு செல்கின்றன.

மார்கழி நீராட்டுப்பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் உவமை வாயிலாக விளக்கப்பட்டுள்ளன. மார்கழியில் மட்டுமே நீராட வேண்டுமென்பதில்லை. மார்கழி தொடங்கி இதனை எப்போதும் நிகழ்த்துதல் வேண்டும்".

மீண்டும் மாலை 6 மணியளவில் தொடங்கப்பெற்ற மாநாட்டில் புதுக்கோட்டை, திருமதி. சிவ. பிருந்தாதேவி அவர்கள் 'பாவை நோன்பும் பயனும்' என்று பேசுகையில்:

"ஆண்டவன் சொற்களின் எல்லையை இகந்த பெருமையை உடையவன். இதனைக் கபீர்தாஸ் "உலகப் பரப்பெலாந் தாளாக மரமெலாம் பேனுவாகக், கடலெல்லாம் மையாகக் கொண்டெழுதினும் ஆண்டவனுடைய புகழ் அடங்குந் தன்மைத்தன்று"

என்றார். ஆண்டவனுடைய புகழை மிகச் சிறந்த முறையிற்பாடி உருகியவர்களில் ஒருவர்தான் திருவெம்பாவை இயற்றியருளிய மணிவாசகப் பெருமான். ஆண்டவனுடைய புகழைத் திருவெம்பாவை ஒருவகையான புதிய முறையில் காண்பிக்கிறது.

ஆவின் மெய்யெலாம் பால் பரவிக்கிடக்கிறது என்ற கூற்றை மெய்ஞ்ஞானிகளும், விஞ்ஞானிகளும் ஒருபடியாக ஒப்புக்கொள்வர். எனினும் அதன் மடியை உற்றுப்பற்றினுல் தான் பால் வரும். அதுபோலே ஆண்டவனுடைய அருள் எங்கும் பரவிக்கிடக்கிறது. அந்த ஆண்டவனுடைய அருளைப் பெறவேண்டுமானுல் திருக்கோயிலை வலம் வந்து தோத்தரித்தல் வேண்டும். அவ்வாறு வலம் வருங்கால் மும்முறை வலம் வருதல் வேண்டும். 'மும்முறை வலம் வரல் வேண்டும்' என்பதன் காரணம், மும்மல மறுதற் பொருட்டாகும். நூல் வல்லாரின் கூற்றுப்படி அமைந்த கோயிலில் இறைவன் திருமுன்பில் ஐந்து படிகள் இருக்கும். ஐந்து படிகளிலும் ஏறும்போது 'ந' 'ம' 'சி' 'வா' 'ய' என்று கூறிக்கொண்டே ஏறல் வேண்டும். ஏறிச் சென்று மனம் நெக்குருகிப் பாடிப்பரவல் வேண்டும். அவ்வண்ணம் பாட இறைவனருள் பெற்ற அடியார்களியற்றிய அருட்பாடல்கள் தேவைப்படுகின்றன. அந்த வரிசையில் மன நெகிழ்ச்சியைத் தரும் வகையில் திருவெம்பாவை அமைந்திருக்கிறது.

இந்த உலகை விட்டு ஓரடி தள்ளி என்னுல் நிற்க முடிந்தால், நான் இந்த ஞாலத்தை ஒரு புரட்டுப் புரட்டிப்பார்த்துவிடுவேன்; ஆயினும், பற்பல வகையான அதிசயங்களும், வேடிக்கைகளும், வியத்தகு செயல்களும் இங்கே நடப்பதை நான் என் கண் முன்னே காண்கிறேன். அவைகளெல்லாம் ஓர் பொதுவான உண்மையை எனக்கறிவிக்கின்றன. "உலகத்தை ஆட்டுவிக்கப் பின்னணியிலே ஒருவன் உளன் என்பதுதான் அந்த உண்மை" என்று கூறினுர் இன்ஸ்டன் என்ற அறிஞர். அந்த மேலான சக்தியே இறைவன். அந்தச் சக்தியை மணிவாசகப் பெருமான் சிவபெருமானுகக் கண்டு வணங்கினுர். வணங்கி. அவனுடைய பாதகமலங்களைப் "போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர், போற்றி யருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்" என்று வேண்டினுர் தமமுடைய பாதக மலம் தீர.

எனவே நாமும் திருவெம்பாவை கொண்டு இறைவனைப், பாடி அவனுடைய பாதகமலங்களை மனத்தில் இருத்தி, நமது பாதக மலத்தைத் தீர்த்துக்கொள்வோமாக." என்று குறிப்பிட்டார்கள்.

இரண்டாவதாகப் பேசிய தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி பொறுப்பு முதல்வர் வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது,

“ திருவெம்பாவையின் உட்கருத்தை நாமிங்கே சிந்திக்க வேண்டும். உலக சமுதாயம் ஓர் உறங்கிக்கிடக்கின்ற பெண். அவர்களைத் தட்டி எழுப்பி இறைவனின் அருட்கடலில் குளிப் பாட்டுந் தொழிலை உடையவர்கள்தான் அருளாளர்கள். அத் தகைய அருளாளர்களிற் சிறந்தவரான மணிவாசகப்பெருமானு ரால் பாடப்பட்ட திருவெம்பாவை நம்மை இறைவனின் அருள் வெள்ளத்துள் ஆழ்த்தும் வன்மை பெற்றது.

நாலாயிர திவ்யப்பிரபந்தத்தை முடிந்தவரை நாடோறும் ஓதல்வேண்டும் என்பர் சமய அறிஞர்கள். அப்படி முடியா விட்டால் திருப்பாவை முப்பது பாடல்களையாவது நாடோறும் பாடவேண்டும். அதுவும் முடியாதவர்கள் அந்த முப்பது பாடல் களில் மிகச் சிறந்த பாடலான “சிற்றஞ்சிறுகாலே” என்ற பாடலையாவது நாடோறும் பாடவேண்டும். அத்தகைய மிகச் சிறந்த தகுதி பெற்றது அந்தப் பாடல். அதனேடொப்புமை யுடையது திருவெம்பாவையிலுள்ள “முன்னைப் பழம்பொருட் கும்” என்ற பாடல். உலகத்தில் மிகச் சிறந்த கொள்கையான நல்வாழ்க்கைத் தத்துவம் அப்பாடலின் உட்கருத்தாக அமைந் துள்ளது.”

சொற்பொழிவு நிகழ்ச்சிகள் முடிந்தபின் இரவு 8 மணி யளவில் தஞ்சாவூர் T. R. கமலாமூர்த்தி குழுவினரின் ‘பார்வதி கல்யாண’ கதாகாலட்சேபம் தக்க துணைக்கருவிகளுடன் மிகச் சிறப்பாக நிகழலாயிற்று இவ்வாறு மாநாட்டின் முதல்நாள் விழா இரவு 12 மணியளவில் நிறைவுபெற்றது.

28—12—64 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் மாநாட்டின் இரண்டாம் நாள் விழா நிகழ்ச்சி தொடங்கலா யிற்று. முதற்கண், விருதுநகர் V. H. N. S. N. கல்லூரித் தமிழாசிரியர், ‘செந்தமிழ் ஞாயிறு’, வித்துவான், திரு. ந. சேதுரகுநாதன் அவர்கள் ‘கண்ணுக்கினியான்’ என்ற பொருள்பற்றிப் பேசுகையிற் குறிப்பிட்டதாவது :-

“ இறைவன் அழிவற்றவன் ; ஒளிவடிவானவன். மலமாகிய இருளில் உயிர்கள் ஆழ்ந்து கிடக்காமல் சிவானந்த வெள்ளத் தில் மூழ்கித் திளைக்க வேண்டுமென்பதே இருபாவைகளும் தரும்

கருத்தாகும். மார்கழித்திங்கள் இறைவனுக்கு வைகறைப்போது என்பர் பெரியோர்கள். பெண்கள் ஒவ்வொருவரை ஒவ்வொருவராக எழுப்பிச் சென்று நீராடுவதாகத் திருவெம்பாவை பேசுவது ஆழ்ந்த உட்கருத்துக்களைக் கொண்டதாகும். நவசக்திகளும் ஒவ்வொருவராக எழுந்து கண்ணுக்கினியவனாகிய இறைவனை வாழ்த்தச் செல்கிறார்கள்; திருவெம்பாவையின் ஆழ்ந்த கருத்துக்களெல்லாம் 'மன்னுபரிபாகர்களுக்கே' விளங்கவல்லது'' என்றார்.

அடுத்து, சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மொழியியல் துறை 'செஞ்சொற்கொண்டல்', வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் M. A., அவர்கள் 'ஏதவனைப்பாடும் பரிசு' என்ற பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

'' அவனைப் பாடும் பரிசு எது? என ஒரு பாடலால் விளக்குகிறார் மணிவாசகப் பெருமான். உயிர்களுக்குத் தன்முனைப்பு எப்போதும் உண்டு; அவை நீங்கவேண்டுமென்றே நம் அருளாசிரியன்மார்கள் பாடுபட்டனர். இவர்கள் பாடல்கள் தன்முனைப்பற்றவை. 'ஏது அவனைப்பாடும் பரிசு' என்றார் மணிவாசகர்; என்சொல்லி வாழ்த்துகேனே?' என்றார் அப்பரடிகள். கால இடங்களைக்கடந்து கருத்தாலும் அரிதற்கரியவன் இறைவன் என்பதே இவ்வருளாளர்களது கருத்தாகும். முனைப்பற்ற நிலை ஒன்றிலேயே அவனது திருவடிகளைக் காணமுடியும்; முனைப்புள்ளவரையிற் பேச்சடங்காது! அகப் புறப் பற்றற்ற நிலையிலேயே இறையடி தரிசனம் கிட்டுமென்றனர் ஆன்றோர்! 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்பது அருள் வாக்கு. இறைவனை 'ஓத உணரா ஒரு தோழன்' என்பர். சொல்லிலடங்காத இறைவனைப் பாடும் பரிசு ஏது? உயிர்களாகிய நாமெல்லாம் அறிவிக்கப்படும் சித்து; அவன் அறிவிப்பவன். அருளாளர்கள் தங்கள் ஆற்றுமையது வெளிப்பாட்டை இவ்வாறு வெளியிட்டனர். 'ஏதவனைப் பாடும் பரிசு' என்றது மணிவாசகரின் ஆற்றுமை மிக்க வெளிப்பாடாகும். இப்பாடலை ஓதுதல் சிறப்பாகும்''.

அடுத்துப் பேசிய, திருவாசகமணி, திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L., அவர்கள் 'திருவாசகம்' என்ற பொருள் பற்றிப் பேசுகையிற் குறிப்பிட்டதாவது :-

'சிவனும் விஷ்ணுவும் ஒரு பொருளே என்பதனை நிலைநாட்டுவதே என் சித்தாந்தம். சித்தம் தூய்தாகவேண்டும்; சித்தத்

தில் மலமாசத்தால் சிவன் குடியேறுவான்! தரிசனத்திற்குச் செல்லும்போது அருளாளர்கள் அருட்கண்ணோடுபார்க்கிறார்கள்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஒரே கருத்துடையவர்கள் என்பதை அவர்கள் பாடிய அருள் நூல்கள் விளக்குகின்றன. சொல்லாலும் பொருளாலும், அமைப்பாலும் நடையாலும் அவர்களது பாடல்களுக்குள்ளே அமைந்துகிடக்கும் ஒப்புமை மிகப் பலவாம். அவற்றுள் சில வருமாறு :-

திருவரங்கத்து எம்பெருமானை தொண்டரடிப்பொடியாழ்வார் பாடுகிறார் :-

"பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தேஎன்னும்
இச்சுவை தவிரயான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே"

என்று. ஈண்டு தில்லைப்பெருமானை அப்பரடிகள் பாடுகிறார் :-

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே."

இரு அருளாளர்களும் வேண்டும் தெய்வங்கள்தான் வேறேயன்றி இருவரது கருத்தும் ஒன்றுபடுகின்றன இப்பாடல்களால்.

பெரியாழ்வார் திருமாலிருஞ்சோலைப் பெருமானை நோக்கி,

"உனக்குப் பணிசெய் திருக்கும் தவமுடையேன்
இனிப்போய் ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கைநின்
சாயை யழிவுகண்டாய்"

எனப் பாட, இங்கே மணிவாசகப் பெருமான் பாடுகிறார் :

"தாரகை போலும் தலைத்தலை மாலைத் தழலரப்பூண்
வீரவென் றன்னை விடுதிகண்டாய் விடிலென்னை மிக்கார்
ஆரடியா னென்னின் உத்தர கோசமங்கைக் கரசின்
சீரடியா ரடியா னென்று நின்னைச் சிரிப்பிப்பனே."

நின்னையன்றி ஒரு தெய்வத்தை வணங்கின் நின் சாயைக்குக் கேடு என்கிறார் நம்மாழ்வார்; மணிவாசகர் 'பெருமானே நீ என்னைக் கைவிட்டால் நின் அடியார்க்கு அடியான் என்று சொல்லி நின்னைச் சிரிப்பிப்பேன் என்கிறார்.

இனி, திருமங்கையாழ்வார் தம் பக்தி அனுபவத்தைத் திருவாய் மொழியால்,

"ஊனே ராக்கைதன்னை உழந்தோம்பி வைத்தமையால்
யானாய் என்தனக்காய் அடியேன் மனம்புகுந்த
தேனே தீங்கரும்பின் தெளிவே என் சிந்தைதன்னால்
நானே எய்தப்பெற்றேன் நறையூர் நின்ற நம்பீயோ!"

எனப் பாடுகிறார். மணிவாசகப் பெருந்தகையாரின் அனுபவமும் இங்கே நோக்கத்தக்கது.

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந்து எனதுள்ளம் புகுந்து அடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"

என்பர். ஆழ்வார் 'நானே எய்தப்பெற்றேன்' என்கிறார். அடிகள் 'நானேயோ தவஞ்செய்தேன்' என்கிறார். ஆழ்வார் 'தேனே தீங்கரும்பின் தெளிவே' என்கிறார். அடிகள் 'தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்குக்கும் சிவபெருமான்' என்கிறார். ஆழ்வார் 'ஊனே ராக்கைதன்னை உழந்தோம்பி வைத்தமையால்' திருவருள் பெற்றேன் என்கிறார்; அடிகள் அவன் அருள் செய்யக் காரணமாயினமையான் 'ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒருத்தன்று' என்கிறார். இவ்வாறு அமைந்துகிடக்கும் ஒப்புமைகள் பலப்பல!

பொய்கையாழ்வார் முதற் றிருவந்தாதியில் "குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்பவன் நாராயணன்" என்கிறார். மணிவாசகப் பெருமான், "குன்றே ஏனைய குற்றங்கள் குணமே கொண்டால், என்தான் கெட்டது" என வினவுகின்றார் இறைவனை. பெரியாழ்வார்,

"உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னிலிட்டேன்"

என்கிறார். மணிவாசகப் பெருந்தகையார்,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்?"

என்று இறைவனை நோக்கிப் பாடுகிறார்.

இவ்வாறு ஆழ்வார் நாயனமார்களெல்லாம் இறைவனை ஒருவழி நின்றே பாடிப் பரவுகின்றனர். வைணவமும், சைவமும் எழுத்தாலும், சொல்லாலும், தொடராலும், பாட்டாலும், பாவகையாலும் எல்லாம் ஒன்றேயாக அமைந்து கிடக்கிறது என்றார்.

அடுத்துப் பேசிய கும்பகோணம், வேதபாஷ்ய பிரவீண, அக்கினிஹோத்ரம், ஸ்ரீ ராமானுஜ தாதாசாரியார் அவர்கள் 'திருப்பாவை என்பதுபற்றிக் குறிப்பிடுகையில்:-

"முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே என்ற மணிவாசகர் கூற்று அதர்வண வேதத்திலும் காணப் படுகிறது. இறைவன் கால எல்லையைக் கடந்தவன்; உலகம முழுவதும் ஒன்று; எனவே பரம்பொருளாகிய அவனைத்துதிக்க மக்களே ஒன்றுபடுங்கள் என்பதே திருப்பாவை போன்ற அருள் நூல்களின் உட்பொருள். திருப்பாவை, திருவெம்பாவை இரண்டுக்கும் ஒற்றுமைகள் மிகப்பல உண்டு. இரு அருளாளர் களும் அன்பால் மழைவேண்ட பெண்களை விடுததனர். இருவரும் தத்தம் பாடலகளால் தாந்தாங்கண்ட அனுபவங் களையே பாடினர். இவ்வருட் பாடல்களைக் கவிதை என்ற அளவில் மதிப்பிட்டால் இதனைப் பாடியவர்கள் அருளாளர்கள் என்று அழைக்கப்படார். திருவெம்பாவையில் அடியார்களைத் துயிலெழுப்புவதுமட்டுமே பேசப்படும். திருப்பாவையில் இறைவனை (கண்ணனை)யும் எழுப்பும் செய்தி சொல்லப்படுகிறது. இறைவனைத் துயில் எழுப்புவதைத் திருவாசகம் திருப்பள்ளி யெழுச்சி எனத்தனியாகக் கொள்ளுகிறது. தட்டி எழுப்புவதின் நோக்கம், மனித இனம் விழிப்புணர்ச்சிகொள்ள வேண்டு மென்பதே; வேதமும் இதனை வலியுறுத்துகிறது" என்றார்கள்.

இரவு பத்து மணியளவில் கும்பகோணம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகக் குழுவினரால் 'ஸ்ரீ மார்க்கண்டேயர்'வரலாறு பொம்மலாட்டமாக நிகழ்த்தப்பட்டது.

29—12—64 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் தொடங்கிய மாநாட்டின் மூன்றும்நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பாளையங்கோட்டை திருமதி டாக்டர். கோமதி

அம்மாள் அவர்கள் திருவாசகத்தில் மகளிர் என்ற பொருள் பற்றிப் பேசுகையில்:

திருவாசகத்தில் மகளிர் பங்கு அதிகம். திருவெம்பாவையில் பேசப்படுபவர்கள் அனைவரும் பெண்களே; நவசக்திகளைப் பற்றிய செய்திகளே அதன்கண் குறிப்பாகப் பேசப்படுகின்றன. அன்னைப்பத்து. திருச்சாழல், திருத்தெள்ளேணம், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூசல், திருவம்மானை என்பனவெல்லாம் பெண்டிரின் பக்தியைப் புலப்படுத்துகிறது. அருளும் அன்பும் கொண்டு இறைவனை வழிபட்டால் பெண்களும் அவனடி பற்றக்கூடும் எனக்குறிப்பிட்டார்கள்.

இரவு 8 மணியளவில் சென்னை திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் குழுவினரால் மணிவாசகப்பெருமானின் வரலாறு கதாகாலட்சேபமாக நிகழ்த்தப்பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் அருளாசியுடன் அனுப்பி வைத்த தேவாரத் திருமுறைகளையும் வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ செல்வமுத்துக்குமரனின் அருட்பிரசாதமும் திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்களுக்கு ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகளால் அளிக்கப்பெற்றது.

இரவு திருமுறைத் திருவீதியுலா தேவாரபாராயணத்துடன் நடைபெற்றது.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.


We visited this temple and went around. We find cleanest temple. The people are good in character. They have arranged accomodation for us in good manner.

(Sd.) Shivarathra Ragendra Swamy,

14—12—64. Suthur Vidya Peeta,

Ramanuja Road, Mysore.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனஸ்தாபனங்கள் சார்பில்
மாயூரம் வள்ளலார்கோயில்



ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி ஆலயத்தில் நிகழ்ந்த
பாவை மாநாட்டில்
திருமுறை திருவீதியுலா

# செய்திகள்

## ஆதீன தேவஸ்தானங்களில் பாவை மாநாடு.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம். திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானம் ஆகிய தேவஸ்தானங்களில் 26—12—64 முதல் 29—12—64 வரையுள்ள நாட்களில் பாவை மாநாடு சிறப்புற நிகழ்ந்தது. பேருந்து மூலமாக சோழநாட்டுத் தலயாத்திரை புரிந்துவரும் சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினரும் கலந்துகொண்டு சமயப் பிரசாரம் செய்தனர். மாநாட்டில், சிதம்பரம், வித்துவான் திரு. ச. சேது சுப்பிரமணிய பிள்ளை, திருவையாறு. செய்தியாளர் திரு. G. தனவேலுபிள்ளை, திருக்கருகாவூர், தொண்டர், திரு. கோ. சிவஞானம், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர், சைவ இலக்கியப் பேரறிஞர், டாக்டர், திரு. மா. இராசமாணிக்கனார் M. A; M. O. L. Phd. புதுக்கோட்டை மகளிர் ஆஸ்ரமம், திருமதி பிருந்தாதேவி, மாயூரம், A. V. C. கல்லூரி ஆங்கிலப்பேராசிரியர் திரு. K. S. நாகராசன் M. A. ஆகியோர், திருவாசகம், மார்கழி நீராடல், எங்கும் இலாததோர் இன்பம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை. இத்தனைக்கும் தித்திக்கும் ஆகியதலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். திருபுவனம், திருவையாறு தேவஸ்தானங்களில் நாகை தேசீய உயர் பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனத் தமிழ்ப்புலவர். வித்துவான் திரு. வை. மு. சண்முக தேசிகர், திருவாரூர் திரு. K. சாம்பசிவ முதலியார் B. A., B. T., ஆகியோரின் இன்னிசைச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. 26, 27—12—64 ஆகிய இரண்டு நாட்கள் திருப்பனந்தாளிலும் 27, 28—12—64 ஆகிய இரண்டு நாட்கள் திருபுவனத்திலும், 28, 29—12—64 ஆகிய இரண்டு நாட்கள் திருவையாற்றிலும் பாவை மாநாடு சிறப்புற நிகழ்ந்தது. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான குத்தாலம், ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமி தேவஸ்தானம், மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி தேவஸ்தானம், மாயூரம், ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி தேவஸ்தானம், கருங்குயில்நாதன் பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி தேவஸ்தானம், திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீஸ்வரசுவாமி தேவஸ்தானம் ஆகிய தேவஸ்தானங் களில் முறையே. 1, 2—1—65, 4—1—65. 6—1—65. 7—1—65, 10-1-65 ஆகிய நாட்களில் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. குத்தாலம் தேவஸ்தானத்தில் 1, 2—1—65 ஆகிய இரு நாட்களிலும், மற்றைய தேவஸ்தானங்களில் ஒவ்வொரு நாட்களிலும் ஆக சொற்பொழிவுகள் நடைபெற்றன அறிஞர்கள் பலர் பங்குகொண்டு சொற்பொழிவாற்றினர். ஆங்காங்கும் அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

சீகாழியில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணைப் படி 31—12—64, 1—1—65 ஆகிய இருநாட்களிலும். மாலையில் பாவை மாநாடு சிறப்புற நிகழ்ந்தது. 31—12—64 வியாழக் கிழமை மாலை சீகாழி தேவஸ்தானம் கட்டளைவிசாரணை, வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர் களும், ஆதீன உயர் அதிகாரிகளும், தேவஸ்தான அலுவலர் களும் சென்னை, இந்து சமய அறநிலைய ஆணையர். திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B. A., B. L., அவர்களை கோயில் மரியாதைகளுடன் வரவேற்று தரிசனம் செய்துவைத்தார்கள். வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை கூறி எல்லோரையும் வரவேற்று திரு ஆணையர் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தினர்கள். பின்னர், திரு. ஆணையர் அவர்கள் பாவை மாநாட்டைத் தொடங்கிவைத்து பாவை மாநாடு நடத்தவேண்டிய இன்றி யமையாமையையும் அதன் பயனையும் விளக்கிப் பேசினர்கள். திருவெம்பாவைப் பாடல்களைச் சிறப்புறப் பாடும் குழந்தைகளுக் குப் பரிசுகளையும் வழங்கினர்கள். அடுத்து கும்பகோணம் அக்னிஹோத்ரம் ஸ்ரீ ராமானுஜ தாதாசாரியார் அவர்கள் திருப் பாவை என்ற தலைப்பிலும், மன்னம்பந்தல் A. V. C. கல்லூரி, ஆங்கிலப்பேராசிரியர், திரு. K. S. நாகராசன் M. A. அவர்கள் திருவெம்பாவை என்ற தலைப்பிலும் பல சிறந்த கருத்துக்களை எடுத்துக்கூறி சொற்பொழிவாற்றினர்கள்.

1—1—65 வெள்ளிக்கிழமை மாலை 6-மணி அளவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனார் M. A. அவர்கள், திருப்பள்ளி யெழுச்சி என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றியபின்னர், திருவாரூர், திரு. K. சாம்பசிவ முதலியார் B. A., B. T. அவர்களின் இன்னிசைச் சொற்பொழிவுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

திருக்கடையூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 2—1—65 சனிக்கிழமை அன்று பாவை மாநாடு தஞ்சாவூர், இந்து சமய அறநிலையத் துணை ஆணையர், திரு. A. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அன்று காலையில் திருமுறைகள் ஒப்பனை செய்யப்பெற்று பண்ணிசைப்பாராயணத்துடன் திருவீதி வலமாகக் கொணரப்பெற்றன. துணை ஆணையர் அவர்களைக் கோயில்மரியாதையுடன் வரவேற்று உபசரித்து வழிபாடு செய்துவைக்கப்பட்டது. பின்னர் துணை ஆணையர் அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்து பாவை நோன்பின் பயனை விளக்கிக் கூறி பஜனை நிகழ்த்தி மக்களைப் பரவசப்படுத்தினார்கள். குழந்தைகளுக்குப் பரிசுகளும் வழங்கினார்கள். பின்னர், திருவாசகமணி, திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L. அவர்கள் "பாவை நோன்பு" என்ற தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சித்தாந்தக் கலைமணி, வித்துவான் திரு. சி, அருணைவடிவேல் முதலியார் அவர்கள் மாணிக்கவாசகர் என்ற பொருள்பற்றியும் பேசினார்கள். அடுத்து, திருவாரூர் திரு. K. சாம்பசிவ முதலியார் B. A., B. T., அவர்களால் திருவெம்பாவைப் பாடல் இன்னிசை அரங்கு நிகழ்த்தப்பட்டது. வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை, நன்றியுரை முதலியன கூறி மாநாட்டை உடனிருந்து நிகழ்த்துவித்தார்கள்.

### சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

## குயப்பேட்டையில் மாத வழிபாடு

நிலைய மன்றத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு நவம்பர் மாதம் 22 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை குயப்பேட்டையில் உள்ள ஸ்ரீ கந்தசாமிக்கோயிலில் சிறப்பாக

நடைபெற்றது. மாலை 5 மணிக்குக் குழுவினரின் சார்பில் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. குழுவினர் திருநீற்றுப்பதிகமும், திருஅங்கமாலைப் பதிகமும் ஓதிக்கொண்டே மாடவீதி வலம் வந்தனர். ஒவ்வொரு சந்நிதியிலும் தர்மபுரம் திரு. P. சுவாமிநாதன் திருமுறை ஓத முறையாக வழிபாடு நிகழ்த்தினர். பிறகு ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவரவர் தொழிலிலேயே தர்மமும் செய்ய முடியும் என்பதை விளக்கியவர் திருநீலகண்டர் என்றும், வாழ்வில் குறைகள் பல இருப்பினும் நிறைமனத்தோடு வாழ்வதே உயரிய இலட்சிய வாழ்வு என்பதைத் திருநீலகண்டர் வாழ்வு எடுத்துக் காட்டுகிறது என்றும், குயவர்கள் நிறைந்துள்ள இப்பேட்டையில் அம்மரபில் அவதரித்த திருநீலகண்டரைப் பிரதிட்டை செய்து வழிபட்டு வருவது பாராட்டத்தக்கது என்றும் குறிப்பிட்டார்கள். சித்தாந்தவித்தகர், கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் ஆலய வழிபாடு செய்ய வேண்டிய முறைபற்றி விளக்கிப் பேசினார்கள். ஆலய அறங்காவலர்கள் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும் சமயப் பிரசாரத்தையும் சிறப்புற நடத்திக்கொடுத்தனர். டிசம்பர் மாத வழிபாடு 25—12—64 முதல் 31—12—64 முடிய சோழநாட்டுக் காவிரி வடகரை மேற்குப்பகுதியில் உள்ள 32 தலங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. தர்மபுரம் திரு. P. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடினார்.

## வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

வைத்தீஸ்வரன்கோயிலில் 19—11—64 கிருத்திகையன்று நிலைய அன்பர்கள் சார்பில் நிகழ்த்திய அபிஷேக அர்ச்சனைப் பிரசாதம் நிலைய மன்றத்தில் 20—11—64 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு திரு. T. V. நடேச முதலியார் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பட்டது. தலைவர் தமது தலைமையுரையில் இந்தியராக - தமிழராக உள்ள ஒவ்வொருவரும் நமது சமய நெறியின் தத்துவத்தையும், சிறப்பையும் தெரிந்திருத்தல் அவசியமென்று குறிப்பிட்டார்கள். தருமபுரம் திரு. P. சுவாமிநாதன் வேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ் பாடி பிரார்த்தனை நிகழ்த்தினார். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்கள்.

## கந்தசஷ்டி விழா

நிலைய மன்றத்தில் 5—11—64 முதல் 11—11—64 முடிய கந்தசஷ்டிவிழா சிறப்பாக நடைபெற்றது. 6—11—64 நீங்கலாக மற்ற நாட்களில் உடையாளூர் திரு. அ. இராமமூர்த்தி சர்மா அவர்கள் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினார்கள். 6—11—64ல் மழை அதிகமானதால் முருகன் வழிபாடும், கந்தர் அநுபூதி பாராயணமும் நடைபெற்றது. கந்தசஷ்டி விழாவை சிலம்புச்செல்வர், திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தொடங்கி வைத்து திரு. K. C. நாகலிங்க முதலியாரவர்களால் இலவசமாக அச்சிட்டுள்ள "திருமுருகாற்றுப்படை பாராயண நூலை வெளியிட்டார்கள். திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ., டாக்டர், திரு. பா. நடராஜன் எம். ஏ., எம். எல். ஏ., திரு. K. E. அருணாசல முதலியார் M. A. B. Com. திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை பி. ஏ., பி. எல். திரு. S. கணேசம் பிள்ளை பி. ஏ., ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் ஒவ்வொருநாள் தலைமையுரையாற்றிச் சிறப்பித்தார்கள். நிலையத் தமிழ் வித்துவான் வகுப்பு மாணவர்களான் திரு. நா. இராகு· திரு. மா. க. காமாட்சிநாதன், ஆசிரியர்களான திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ., வித்துவான். திரு. வே. பாலசுந்தரம், வித்துவான். திரு. க. ஆறுமுகம். வித்துவான். திரு. ந. இராமலிங்கம் ஆகியோர் ஒவ்வொருநாளும் திருமுருகாற்றுபடை, திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், முத்துக்குமரசாமி பிள்ளைத்தமிழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருப்புகழ் ஆகியவைபற்றிப் பேசினார்கள். கலை நிகழ்ச்சிகளாக, சென்னை யரங்கின் செய்தித் துறையினர் படக்காட்சியும், திரு. T. C. நீலகண்ட ஐயரவர்களின் கதாகாலட்சேபமும், சிறப்பாக நடைபெற்றன. வித்துவான். திரு. ந. இராமலிங்கம் ஒவ்வொரு நாளும் கடவுள் வணக்கமும். வாழ்த்தும் பாடினார். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

## ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூசை விழா

நிலையத்தில் 4–11—64 மாலை சந்தானகுரவருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்ட தேவர் குருபூசை விழா சிறப்பாக நடைபெற்றது. சைவப் பெரியார், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். டாக்டர், திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள் "மெய்கண்டார் வரலாறு" என்ற தலைப்பில் கல்வெட்டு ஆதாரங்களுடன் அரிய ஆராய்ச்சியுரை நிகழ்த்தினார்கள். வாரணாசியைச் சேர்ந்த ஸ்ரீ ஆச்சார்ய சிவப்பிரசாத் அவர்கள், "யோகாப்பியாசம்" என்பது பற்றி

ஆங்கிலத்தில் விரிவுரையாற்றினார்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள். வித்துவான், திரு. ந. இராமலிங்கம் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினார்.

## திருக்கடவூர் சோமவார சங்காபிஷேகப் பிரசாதம் வழங்கு விழா

திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமிர்த கடேசுவரசுவாமிக்கு 300 ஆண்டுகட்குமுன் 216 சரக்குகள் சேர்த்து 1008 சங்காபிஷேகம் செய்து தனக்குற்ற மகா ரோகத்தைப் போக்கிக்கொண்டவர் பிரகதீஸ்வரமகாராஜா, அதுமுதல் ஒவ்வோராண்டும் கார்த்திகை மாத சோமவாரங்களில் அதேபோல் 1008 சங்காபிஷேகம் நடைபெற்று வருகிறது. அந்தப் பிரசாதம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் கருணையால் சென்னை அன்பர்கட்கும் ஐந்தாண்டுகளாகக் கிடைத்து வருகின்றது. இந்த ஆண்டில் 16—11—64 சோமவாரப் பிரசாதம் 18—11—64 மாலையில் வழக்கறிஞர், திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை தலைமையிலும், 23—11—64 சோமவாரப் பிரசாதம் 24—11—64 மாலை இராவ்சாகேப், திரு. நல். முருகேசச முதலியார் தலைமையிலும், 30—11—64 சோமவாரப் பிரசாதம் 1-12-64 மாலை கோவைகிழார், திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் தலைமையிலும், 7—12—64 சோமவாரப் பிரசாதம் 8—12—64 மாலை சம்ஸ்கிருதப் பேராசிரியர், திரு. A. சண்முக முதலியார் தலைமையிலும் திருக்கடவூர்த் தேவார பாராயணம் நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பட்டன. 1—12—64 விழாவில் திருவாசகமணி, திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் திருக்கடவூர்ச் சிறப்பையும், சங்காபிஷேகப் பெருமையையும் பற்றிப் பேசினார்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும், கூறினார்கள். 18—11—64ல் வித்துவான், திரு. ந. இராமலிங்கம் கடவூர்த் தேவார பாராயணம் புரிந்தார். மற்ற நாட்களில் தருமபுரம் திரு. P. சுவாமிநாதன் திருக்கடவூர்த் தேவார பாராயணம் நிகழ்த்தினார்.

## திருவாமூரில் ஐப்பசிமாதச் சதய விழா திருமுறை வகுப்புத் தொடக்கவிழா

அப்பர் அவதாரத் தலமாகிய திருவாமூரில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு அன்பர் உபயமாக சதயந்தோறும் ஸ்ரீ அப்பர் சுவாமிக்கும், ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பா சமேத

ஸ்ரீ பசுபதீஸ்வரசுவாமிக்கும் விசேஷ அபிஷேக ஆராதனையும், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளால் சமயப் பிரசாரமும் நடைபெற்று வருகிறது. தேவார முதல்வர் அவதரித்த அத்தலத்தில் உள்ள சிறுவர் சிறுமியர் தேவாரம் பயில்வதற்கும். அக்கோயிலில் தேவார பாராயணம் புரிதற்கும், தேவார இசைமணி, திரு. எஸ். சங்கரநாராயணன் அவர்களைப் பல அன்பர்களின் நன்கொடையால் அப்பர் சுவாமி கோயிலுக்கு ஓதுவாமூர்த்தியாக நியமித்திருக்கிறது. 13—11—64 சதய விழாவன்று பாண்டிச்சேரி, திரு. எஸ். சென்னியப்ப முதலியார் அவர்கள் திருமுறை வகுப்பைத் தொடங்கி வைத்தார்கள். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரை கூறினார்கள். விருத்தாசலம் வித்துவான், திரு. குஞ்சிதபாதம் பிள்ளை, திரு. ஆ. சீனிவாசன், பாண்டூர் திரு. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் தேவாரச் சிறப்புப்பற்றிப் பேசினார்கள். திரு. எஸ். சங்கரநாராயணன் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினார். விருத்தாசலம் தேவாரப் பாடசாலை ஆசிரியர், திரு. S. கல்யாணசுந்தர தேசிகர், திருவதிகை, திருஞானசம்பந்த தேசிகர் ஆகியோர் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர். தினசரி 30 சிறுவர் சிறுமியர் தேவாரம் பயின்று வருகின்றனர்.


குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமாரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A . B. L., அவர்கள்

"குமரகுருபரன்" ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்.

# எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(குரோதிஸு தைமீ 1உ முதல் 29உ முடிய)

(14—1—65 முதல் 11—2—65 முடிய)

ஸ்ரீ சிவபெருமான் திருவருளை முன்னிட்டு நிகழும் குரோதி வருஷம் தை மாதம் 30ம் தேதி புதன்வாரம் சுக்கில ஏகாதசியும் கிருத்திகா நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் உதயாதி 43 நாழிகை 40 விநாடிக்கு கன்னியா லக்னத்தில் சிம்ம நவாம்சையில் திருமூர்த்தி சொரூபியாகிய ஸ்ரீ சூர்யபகவான் தனூர் ராசியிலிருந்து மகர ராசிக்கு பிரவேச காலம் ஏற்படுகிற சுப முகூர்த்த பலத்தால் சகல ஜகத்துக்கும் சமஸ்த மங்களமும் உண்டாகி சகல பிரஜைகளும் சுகவாழ்வு நடத்திக்கொண்டு தன தான்ய சமிர்த்தியுடனும் ஆரோக்யத்துடனும் பயமில்லாமல் சதா தெய்வ சிந்தனையோடும் தர்மபுத்தியோடும் இருந்து கொண்டு சுகவாழ்வு நடத்திவர சர்வேச்வரனுயும் பிரத்யக்ஷ தெய்வமாயும் உள்ள ஸ்ரீ சூரிய பகவான் அருள் புரிவாராக. தர்மமே ஜயம். பொங்கலோ பொங்கல். ஒவ்வொரு கிரகத்திலும் சந்தோஷத்தோடு பால் பொங்குக.

## 1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தையும் மங்களத்தையும் தரும். தனதான்ய விருத்தியும் ஜீவன லாபமும் ஆரோக்கியமும் உண்டுபண்ணும். சகல துன்பங்களும் விலகி சந்தோஷம் உண்டாகும், புதன், வியாழன் சுபமாகும்.

## 2. ரிஷபம். கார்த்திகை $\frac{3}{4}$ - ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3 பாதங்கள் மிச்சிர பலனைத்தரும். ஆரோக்யக் குறைவும் அதிக விரயமும் காட்டும். கார்த்திகை 4ம் பாதமும், ரோகிணி நான்கு பாதங்களும் மிருகசிர்ஷம் 1, 2 பாதங்களும் சுபத்தைத்தரும். நஷ்டதனம் வந்துசேரும்.

ராஜாங்கத்தால் அனுகூலம் உண்டாகும். புத்திராதிகளால் மேன்மையும் கீர்த்தியும் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசிர்ஷம் 3, 4 பாதங்களும் திருவாதிரை 1, 2 பாதங்களும் சுபத்தையும் ஆரோக்யத்தையும் தந்து புத்திர விருத்தியையும் தன விருத்தியையும் தரும். திருவாதிரை 3, 4 பாதமும் புனர்பூசம் முதல் பாதமும் மிச்சிர பலனைத்தரும். வரவுக்கு மிஞ்சின செலவும் ஆரோக்யக் குறைவும் காட்டும். புனர்பூசம் 2, 3 பாதங்கள் விசேஷமான நன்மைகளையும் தன தான்ய விருத்திகளையும் குடும்ப சுகத்தையும் தரும். சனி, செவ்வாய் சுபமாகும்.

### 4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சஸ்யவிருத்தி தான்யவிருத்திகளைத்தந்து, இல்லறம் ஓங்கச்செய்யும். வித்யா விருத்தியும் உத்தியோக விருத்தியும் ஏற்படும். வியவகாரம் ஜெயிக்கும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். மனம் சாந்தி அடையும், புதன் வியாழன் சுபமாகும்.

### 5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் விவாகாதி சுபங்களைத்தரும். உத்தியோக உயர்வும் கீர்த்தி பத்திரமும் கிடைக்கச்செய்யும். குடும்பம் ஓங்கும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் ஆரோக்யத்தையும் தன தான்ய விருத்தியையும் தரும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். தர்மபுத்தியும் பரோபகார சிந்தனையும் ஓங்கும். உலக பிரசித்தி ஏற்படச்செய்யும். தெய்வபலம் முன்னிற்கும். சகல காரியங்களும் ஜெயமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

சித்திரை 3, 4 பாதங்கள் சுபமிராது. ஆரோக்யக் குறைவும் சதா மனக்கவலையும் தனதான்ய விருத்தியில் குறைவும் காட்டும். சுவாதி நான்கு பாதங்களும் விசாகம் 1, 2 பாதங்களும் சுபசந்தோஷத்தைத்தரும். ஜீவன விருத்தி ஏற்படச் செய்யும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். தனதான்ய விருத்தியும் உலகபிரசித்தியும் ஏற்படும். சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் நன்மையைத்தரும். சகல காரியங்களும் வெற்றியடையும், தொழில் ஓங்கும், மேல் பதவிகளும் கீர்த்தியும் குடும்ப சுகமும் ஏற்படச்செய்யும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் வித்தியாவிருத்தியையும் தொழில் விருத்தியையும் உண்டுபண்ணும். சஸ்ய விருத்தி தான்ய விருத்தி ஏற்படும். குடும்பம் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும். தானதர்ம பலன் கிடைக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் ஆரோக்யத்தைத் தரும். உத்தியோகத்தில் மேன்மையும் கீர்த்தி பத்திரமும் கிடைக்கச்செய்யும். புத்திரவிருத்தியும் தனதான்ய விருத்தியும் ஏற்படும். மனதிற்கு சந்தோஷம் உண்டுபண்ணும். வியாழன், சனி சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் $\frac{1}{2}$ சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் இல்லற சுகத்தைத்தரும். குடும்பம் ஓங்கும். தனதான்ய விருத்தியும் ஜீவன லாபமும் ஏற்படும். மாதமத்தியில் சுவல்பமான வியாதி பீடையைக் காட்டி சமனமாக்கும். சகல காரியமும் ஜயமாகும். திங்கள், புதன் சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். தொழில் ஓங்கும். நஷ்டமான பொருள் தானுக வந்து சேரும். புத்திராதிகளால் சுகம் ஏற்படும். இல்லற சுகம் உண்டாகும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கச்செய்யும். தெய்வபலம் முன்னின்று காக்கும். சுபம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

குறிப்பு :- உலகத்தின் எதிர்காலம் தர்ம பலத்தாலும் தெய்வீக சக்தியாலும் தர்மமுள்ள பூமிகள் ரக்ஷிக்கப்பட்டு பிரஜைகள் தெய்வ பலத்தால் சுகமடைவார்கள். தெய்வபலன் தான் இனி உலகத்தைக் காக்கவேண்டும். ஸ்ரீ சர்வேஸ்வரர் அருள் புரிவாராக. சுபமுண்டாகும்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswamy Devasthanam, Tirucadaiyur.

I had the special fortune to visit this holy shrine with my wife in connection with my 60th birthday. I have great pleasure to note the courtesy of all the persons in charge of management, who did all that is possible; to give all comports and conveniences during my short stay.

I am much impressed with the serenity and I am returning with contentment and with a desire to come back again. I wish this institution all help and kindness from the public.

(Sd.) V. C. Ramasamy,
Govt. Pleader,
Coimbatore and the Nilgris.

21—12—64.

உ

சிவமயம்

"ஞானசம்பம்"

# இருபத்திமூன்ருவது ஆண்டு மலர்ப்

## பொருளடக்கம்


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 1 | அஞ்சொல் தமிழோர் புகழ் வேளூரரசன் | 165 |
| 2 | அணியுடை ஆதிரை நாள் | 1 |
| 3 | அமைச்சனின் சொல்வன்மை | 411 |
| 4 | அருட் கடலும் அன்புக் கடலும் | 318 |
| 5 | அருள் வாக்கு | 17, 107, 162 |
| 6 | அவனன்றி ஓரணுவும் அசையாது | 344 |
| 7 | அவன் இவன் தான் | 301 |
| 8 | அன்னை அருள் | 615 |
| 9 | ஆச்சாள்புரம் கும்பாபிஷேகம் | 364 |
| 10 | ஆடித்திங்களின் அருள் நினைவுகள் | 532 |
| 11 | ஆறுபடை வீட்டுத்துதிகள் | 249 |
| 12 | ஆனைமுகனடி போற்றி | 555 |
| 13 | ஆன்மீக வாழ்வு வளம்பெற | 265 |
| 14 | இயற்கைக்காட்சியும், செயற்கைக்காட்சியும் | 42 |
| 15 | இலங்கை வானொலியின் விமர்சனம் | 507, 711 |
| 16 | எதிர்காலம் | 73, 137. 194, 257, 316, 272 427, 491, 551, 611, 668, 724 |
| 17 | என்ன குறையும் இலோம் | 77 |
| 18 | ஒருவாசகம் | 51 |
| 19 | கடிதம் | 314, 483 |
| 20 | கும்பாபிஷேக விழா | 571 |
| 21 | கோளிலியப்பர் கும்பாபிஷேகம் | 431 |

| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 22 | சங்க இலக்கியங்களில் சமயம் | 395, 453 |
| 23 | சப்தவிடங்க ஸ்தல தரிசனம் | 481 |
| 24 | சமயமும் இளைஞர்களும் | 20, 110 |
| 25 | சம்பந்த சரணலய சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் | 523 |
| 26 | சஹஸ்ராகமம் | 38, 100, 172, 245, 293, 348, 407, 457, 528, 597, 639, 691, |
| 27 | சாரதா நவராத்திரி | 607 |
| 28 | சித்தாந்த வினவிடை | 30, 93, 157, 238, 297, 335, 391, 468, 509, 589, 643, 703 |
| 29 | சிந்து பூந்துறையும், சிவனருள் நெறியும் | 558 |
| 30 | சிவஞானபோதச் சிற்றுரை | 26 |
| 31 | சிவராத்திரிச் சிறப்பு | 197 |
| 32 | சிவவழிபாடும், சங்க நூல்களும் | 176, 217, 282 |
| 33 | சிவாலய தரிசனமுறை | 184, 213, 279 |
| 34 | செய்திகள் | 62, 123, 187, 242, 305, 368, 423, 483 546, 601, 663, 721 |
| 35 | ஞானசம்பந்தத்தின் நற்பணிகள் | 677 |
| 36 | தமிழ் கூறுநல்லுலகம் | 356, 403, 447, 511, 651. 699 |
| 37 | தருமம் என்று ஒருபொருள் | 290 |
| 38 | தருமையாதீன வெளியீடுகள் | 54 |
| 39 | திருக்குவளை கல்வெட்டுக்கள் | 657 |
| 40 | திருக்குவளையில் பன்னிரு திருமுறை மாநாடு | 473 |
| 41 | திருக்கோயில் அமைப்புமுறை | 58, 104 |
| 42 | திருக்கோளிலி | 461 |
| 43 | திருத்தருமையிலே திருநெறிய தமிழ் | 375 |
| 44 | திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு | 414 |
| 45 | திருமுகம் படும்பாடு | 592 |
| 46 | தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக்கட்டுரைகள் | 120, 181, 221, 286, 340, 399, 451, 516, 595, 631 687 |
| 47 | தோத்திரப்பாமாலை | 599, 655 |
| 48 | நேருவின் ஆன்மா சாந்திபெறுக | 379 |

| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 49 | பணிவியல் நன்றியுரை | 585 |
| 50 | பாடிகாவல் | 520 |
| 51 | பாராட்டு வாழ்த்துரைகள் | 477 |
| 52 | பொறுமையின் பிறப்பிடம் | 695 |
| 53 | பிறவியின் பயன் | 141 |
| 54 | புத்தாண்டு ஆசிச்செய்தி | 263 |
| 55 | புத்தாண்டு வாழ்த்து | 14 |
| 56 | பெருமழையும் திருமுறையும் | 35 |
| 57 | பொங்குசுடர் ஒளி | 231 |
| 58 | பொருளடக்கம் | i |
| 59 | பொறுமையின் சிகரம் தருமரே | 635 |
| 60 | மகாசிவராத்திரி வரலாறு | 232 |
| 61 | மகோற்சவப் பத்திரிகை | i |
| 62 | மதிப்புரை | 156, 231, 256, 314, 360, 364 |
| 63 | மார்கழித்திங்கள் | |
| 64 | மைசூர் மன்னரும், மடாலய மாண்பும் | 495 |
| 65 | மைசூர் மன்னர் வருகை | 545 |
| 66 | மௌனகுரு வணக்கம் | 526, 661 |
| 67 | யாம் இரப்பவை | 352 |
| 68 | வணக்கம் | 5. 82, 140, 202, 270, 325, 382, 435, 499, 561, 619, 680, |
| 69 | வந்தது பொங்கல் | 81 |
| 70 | வாராதிருந்தால் | 225 |
| 71 | வாழியாதனின் வள்ளன்மை | 115 |
| 72 | ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஸ்துதி | 390 |
| 73 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானத்துக்கு வரவேற்பு | 278 |
| 74 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளுரை | 7, 83, 147, 203, 271, 326, 383, 436, 500 562, 620, 681, |
| 75 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் ஆசியுரை | 579 |
| 76 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் கேதாரநாதம், பதரிநாதத் தலயாத்திரை | 45 |
| 77 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் தலயாத்திரை | 535 |

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்
தென்னாப்பிரிக்காவிற்குச் சென்று சமயப்பிரசாரம் செய்து திரும்பிய



" திருவாசகமணி " திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L., அவர்களுக்குப்
பொன்னாடை போர்த்திப் பாராட்டிய பாராட்டுவிழா.

உ

குருபாதம்

# தருமையாதீனம் திருஞானசம்பந்தர் ஆலயம்

## திருநெல்வேலி சந்திப்பு.

ஞாயிறுதோறும் சொற்பொழிவு மாலை 6-30 மணி

17—1—65 அரிவாட்டாயநாயனூர்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
சோக்கநாதவேண்பா - ஆலந்தரித்தலிங்கம்
— திரு. ம. சிவசம்பு

24—1—65 திருநீலகண்டநாயனூர்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
சோக்கநாதவேண்பா - கருணாநிதி
— திரு ம. சிவசம்பு

31—1—65 அப்பூதிநாயனூர்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
சோக்கநாதவேண்பா - நரகம் இனி நாடேம்
— திரு. ம. சிவசம்பு

7—2—65 கலிக்கம்ப நாயனூர்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
சோக்கநாதவேண்பா - உன்னைச் சிங்காரித்து
— திரு. ம. சிவசம்பு

நெல்லை அருணகிரி இசைக் கழகம்,

இராம. கனகசபாபதி,
அமைச்சர்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-1-65